# தமிழன்

Follow us:

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 102 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(11.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 16, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

தீபாவளிக்குள் தீர்வு, பொங்கலுக்குள் தீர்வு என்பதெல்லாம் போய் இப்போது சுதந்திர தினத்திற்குள் தீர்வா..?



## உஷ்



ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்தபோது இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசத்தை தாக்க முயன்றாராம்... அதுவும் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில்...

நாடாளுமன்றக் குழுவொன்றில் தனது பெயர் வெட்டப்பட்டதால் கடுப்பில் இருக்கும் பிரசன்ன ரணவீர, பொதுஜன பெரமுன மேலிட முக்கியஸ்தர்களையும் வார்த்தைகளால் வறுத்தெடுத்தாராம்...



## அடுத்த சுதந்திர தினத்திற்குள் தீர்வைக் காண்போம்

# தமிழர் பிரச்சினையைப் பேச வாருங்கள்!

- தமிழ்த் தலைவர்களுக்கு ரணில் பகிரங்க அழைப்பு
- அரசியல் கைதிகளை விடுவிக்கவும் நடவடிக்கை

•நா. தினுஷா

வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டுமெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதற்காக வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம்முதல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க விருப்பதாகவும் கூறினார். அத்துடன், இந்த விடயத்தில் ஈடுபாடுள்ள ஏனைய உறுப்பினர்களையும் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு அழைப்புவிடுத்தார்.

கோப்-27 மாநாட்டில் பங்குபற்றுவதற்காக எகிப்துக்கு சென்றிருந்த ஜனாதிபதி நாடு திரும்பிய நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று (10) ஆற்றிய விசேட உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, காணாமல்போனோர் தொடர்பில் ஆராய்ந்து விசாரணைகளை நிறைவுசெய்வதற்காக மேலதிக குழுக்களை நியமித்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு நீதி அமைச்சருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்

# ஐ.எம்.எவ். நிவாரணத்துக்காக தேர்தலை நடத்த வேண்டும்

## ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

•நா. தினுஷா

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டினால் மாத்திரமே சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே, நாட்டில் இடம்பெறவேண்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இந்த அரசாங்கம் நடத்தினால் மாத்திரமே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். 02 பக்கம்



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் திருகோணமலையிலுள்ள இந்தியன் ஒயில் நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் குதங்களை நேற்று பார்வையிட்டனர். ஐஓசி நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

# 25 ஆயிரம் கைதிகள் சிறைச்சாலைகளில்

## 13,000 பேருக்கே இடவசதி என்கிறார் அமைச்சர் விஜேதாச



•நா. தினுஷா

சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் வரையிலான கைதிகளுக்கு மாத்திரமே இடவசதி காணப்படுகிறது. ஆனால், நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் 25 ஆயிரம் கைதிகள் இருக்கிறார்கள். இதனால் இடவசதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். 02 பக்கம்

# பகிடிவதை விசாரணைகள் சி.ஐ.டிக்கு ஒப்படைப்பு

•நா. தினுஷா

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் பதிவாகும் முறைப்பாடுகள் அடுத்தகட்ட விசாரணைகளுக்காக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன சகல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. 02 பக்கம்

# இலங்கைப் பெண்கள் பாலியலுக்கு விற்பனை

## ஓமானில் விசேட விசாரணைகள் ஆரம்பம்





•ம. சுசிகலா

ஓமானுக்கு வீட்டுப்பணியாளர்களாக அனுப்பப்பட்ட இலங்கைப் பெண்கள் ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ்... 02 பக்கம்

# டயானாவுக்கு இரட்டைக் குடியுரிமையா?

## விசாரணைக்கு நீதிமன்றம் பணிப்பு

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்துக்கு நேற்று (10) உத்தரவிட்டது.

இந்த விசாரணைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பணிப்புரை வழங் கியுள்ளது. 02 பக்கம்

# பெருந்தோட்ட மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



02 பக்கம்



# தனுஷ்க நிரபராதி

## மீண்டும் அணியில் இணைக்கக் கோருகிறார் எஸ்.பி.

• கே. சுபானி

கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க, தன்மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுவார். அவர் நிரபராதி. அவர் மீண்டும் அணியில் இணைந்து விளையாடுவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் - என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். 02 பக்கம்

# கனடாவுக்கு அனுப்ப ரூ. 20 இலட்சம் வரை சுருட்டிய கடத்தல்காரர்கள்



## வியட்நாம் இராணுவ முகாமுக்குப் போக மறுத்த இலங்கையர்கள்

03 பக்கம்

# நாடாளுமன்றத்துக்கு விசேட பாதுகாப்பு



நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட உரை எதிர்வரும் திங்கட்கிழமை முன்வைக்கப்படவிருப்பதை முன்னிட்டு கடந்த வருடங்களைப் போன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று (10) அறிவித்தார்.

இதற்கமைய, உறுப்பினர்களின் ஓய்வறைகள், ஆடை அலுமாரிகள் உட்பட நாடாளுமன்றத்தின் முழு கட்டடமும் இன்றைய தினம் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படும். 02 பக்கம்

## வெற் வரி திருத்தச் சட்டம்

# அரசியலமைப்புக்கு முரணல்ல

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெறுமதிசேர் வரி (வெற் வரி) திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்லவென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்துக்கு நேற்று (10) அறிவித்தார்.

பெறுமதிசேர் வரி திருத்தச் சட்டமூலத்தை சில யோசனைகளுக்கமைய திருத்தங்களுடன் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## ஐ.எம்.எவ். நிவாரணத்துக்காக...

அதேபோன்று தேர்தலை காலந்தாழ்த்தும் முயற்சிகளை தோற்கடிக்க எதிர்த்தரப்பினர் தயாராக இருப்பதாகவும் தேர்தலை காலந்தாழ்த்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள சுதந்திர மக்கள் சபையின் பிரதான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அடுத்தவருடம் அரசாங்கத்தின் செலவு, அண்ணளவாக வருமானத்தை விட மூன்று மடங்காக இருக்கும். அதேபோன்று, இந்த இடைவெளியை நிரப்புவதற்காக தொடர்ந்து கடன் பெறுவதில்லை என்பதே எமது உறுதியான தீர்மானமாக இருக்கிறது.

அவ்வாறாயின் முதலீடு மற்றும் அந்நிய ஏற்றுமதியினூடாகவே எமது வருவாயை அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். மத்திய கிழக்கு நாடுகளை அடிப்படையாக கொண்டே எமது பிரதான ஏற்றுமதி நடவடிக்கைகள் அமையப்பெற்றுள்ளன.

எனவே, ஜ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் அடிப்படையில் குறிப்பாக ஆடை போன்ற உற்பத்திகளை தீர்வை வரியின்றி மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியதாக இருக்கும்.

ஆனால், உரிமை அல்லது விட்டுக்கொடுப்புகளின் அடிப்படையிலான விதிமுறைகளின் அடிப்படையிலேயே அந்த வயப்பு எமக்கு கிடைக்கும். நாட்டின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரதான விதிமுறையாகும். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்பின் திட்டங்களின் பிரகாரமே நாட்டின் நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த வருட இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். ஆனால், நாட்டில் இடம்பெறவுள்ள தேர்தலை நடத்தாவிட்டால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒருபோதும் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது. அதன் காரணமாகவே, எதிர்த்தரப்பிலுள்ள சகல குழுவினரையும் ஓரணிக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். உள்ளூராட்சி மன்ற தேர்தலை காலந்தாழ்த்த ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என்றார்.

## பகிடிவதை விசாரணைகள்...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழக மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தும் சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாடுகள், கடந்த சில தினங்களாக பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

அதற்கமைய, களனி பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவரொருவரை தாக்கி அவரை பகிடிவதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று இந்த சம்பவத்துக்கு ஆலோசனை வழங்கியதாக தெரிவித்து மேலும் ஆறு மாணவர்கள், மேலும் சில மாணவர்களால் விடுதியில் வைத்திருந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களை தாக்கியதாக குறிப்பிட்டு களனி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதது.

இதேவேளை, பேராதேனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவரொருவருக்கு சமூக ஊடகத்தினூடாக பகிடிவதைக்குட்படுத்தியுள்ளமை குறித்து பேராதேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான குற்றவியல் வழக்கை, அடுத்தகட்ட விசாரணைகளுக்காக, குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு ஒப்படைக்க பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேபோன்று, எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களில் பதிவாகும் பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகள், குற்றவியல் விசாரணை திணைககளத்தினூடாக முனனெடுக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸ் நிலைய நிலைத்துக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் விசாரணைகளுக்காக குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் சகல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கு தேவையான ஆலோசனைகளையும் இவர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

## தனுஷ்க நிரபராதி...

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் விளையாட்டு வீரரொருவர் களியாட்ட விடுதிகளுக்குச் செல்வது இயல்பானது. எனினும், அவ்விடயம் தொடர்ச்சியாக இடம்பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுடன் தொடர்புபட்ட சம்பவத்தைப் போன்று பல்வேறு விடயங்கள் அவுஸ்திரேலியாவில் வழமையாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. பணம் ஈட்டும் நோக்கில் அங்கு செல்வோரை தமது பொறிக்குள் விழவைக்கும் வியாபாரம் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையிலுள்ளன.

இந்நிலையில், கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க மேற்படி விடயத்தில் குற்றவாளியல்லர்.

அவர் நிரபராதி, அவர் மீண்டும் அணியில் இணைந்து விளையாடுவதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுகொடுக்க வேண்டும்.

மேற்படி விடயம் தொடர்பில் சட்டத்தரணிகளின் கூற்றுக்கிணங்க தனுஷ்க குணதிலக்க அவர் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து விரைவில் விடுபடுவார் என்றார்.

## டயானாவுக்கு...

சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவொன்று தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் அது தொடர்பான வழக்கு நேற்று நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு பிரித்தானிய குடியுரிமையுடன் கூடிய இரட்டைக் குடியுரிமை உள்ளதா என்பது குறித்து ஆராயுமாறு நீதவான் நந்தன அமரசிங்க இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

## வெற் வரி திருத்தச் சட்டம்...

அதன் பிரகாரம், திருத்தத்தின் 10 (01) பிரிவின் பிரகாரம் சட்டம் அமுலாகும் திகதியிலிருந்து முன்மொழிவுகள் அமுலாக்கப்பட வேண்டும். மேலும், பிரிவு 04 (01) முன்மொழிவில் 2022 செப்டெம்பர் 30 எனக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி, 2022 நவம்பர் 30 என மாற்றப்படுதல் அவசியமாகும். அத்துடன் பிரிவு 04 (02) முன்மொழிவில் 2022 ஒக்டோபர் 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி 2022 டிசம்பர் 01 என மாற்றப்பட வேண்டும் என உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்துக்கு...

வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 14ஆம் திகதி பொதுமக்கள் கலரி வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். நாடாளுமன்ற வாகனத் தரிப்பிடம் அன்றைய தினம் மூடப்பட்டிருப்பதுடன், உறுப்பினர்கள் வருகை தரும் வாகனங்கள் உரிய தரிப்பிடத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் நாடாளுமன்றத்துக்கு வருகைதரும் உறுப்பினர்கள் முடிந்தளவு தமது சாரதிகளுடன் வருமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வாகனத்தை தாமே செலுத்திவந்தால் அவ்வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு உறுப்பினர்களின் நுழைவாயிலுக்கு அருகில் நாடாளுமன்ற பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் தனது அறிவிப்பில் தெரிவித்தார். அத்துடன், அன்றைய தினம் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அனைத்துப் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

## இலங்கைப் பெண்கள்...

ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று (10) தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது,

சுற்றுலா விசா என்ற போர்வையில் இலங்கை பெண்கள் ஓமானுக்கு தொழிலுக்காக அனுப்பப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு முகவர்கள் இந்த பெண்களுக்கு வாக்குறுதியளித்தபடி தொழிலைப் பெற்றுக் கொடுக்காமல் அதற்கு பதிலாக ஏலத்தில் விற்கப்படுகின்றனர்.

ஓமானில் உள்ள முகவர்களுடன் தொடர்பு கொண்டு உள்ளூர் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் ஆட்கடத்தல் மோசடி மேற்கொள்ளப்படுவதுடன், மேலதிக விபரங்களைக் கண்டறிய எமது விசாரணைக் குழுவொன்று ஓமானுக்கு விஜயம் செய்துள்ளது.

ஓமானில் சிக்கியிருந்த 45 இலங்கைப் பெண்களை இந்த விசாரணைக் குழுவினர் சந்தித்துள்ளனர்.

குறித்த விசாரணையில், ஓமானை அடைந்ததும் பெண்கள் அவர்களின் வயது மற்றும் தோற்றத்திற்கு ஏற்ப வரிசையாக நிறுத்தப்பட்டு, பாலுறவு நடவடிக்கைகளில் ஈடுபட ஏலம் மூலம் விற்கப்படுவது தெரியவந்தது.

எமது விசாரணைக் குழுவினர் சந்தித்த 45 பெண்களும் தற்போது ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தில் உள்ள பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பெருந்தோட்ட மக்களை...

*ம. சுசிகலா*

“மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றன. ஆயினும், எங்களுக்கான அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. மலையக மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்” - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நேற்று (10) தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மலையகத்தில் காணி உரிமை, வீட்டுரிமை, தமிழ்மொழிப் பிரகடனம் ஆகியவற்றுடன், தமிழ் பேசக்கூடிய பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். கல்வி அதிகாரிகள் வலய, கோட்ட மட்டத்தில் இன்னும் பெரும்பான்மையினரே இருக்கின்றனர்.

ஒரு தமிழ் கல்வி அதிகாரி கிடையாது. அரசாங்க பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள், காரியாலயங்களில் தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறையாகவே உள்ளனர். காணிகளனைத்தும் காடு மேடாக காணப்படுகின்றன.

மலையக மக்களுக்கு காணிகளை வழங்கியிருந்தால் தற்போது விவசாயம் மேலோங்கியிருக்கும். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்திய அரசாங்கமும் இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம் 13ஆவது அரசியல் சட்டத்தின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் எங்கே? மாகாண சபைகள் முடக்கப்பட்டிருக்கின்றன. மலையக மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

காடாக இருக்கின்ற காணிகளைக் கொடுங்கள். காழ்ப்புணர்ச்சி, இனவாதம் வேண்டாம். அரசாங்கமே இனவாதத்தை தூக்கியெறியுங்கள். தமிழர்கள், மலையக மக்களென ஒதுக்காதீர்கள். 200 வருடங்கள் இந்த நாட்டின் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் ஏன் இந்தக் காழ்ப்புணர்ச்சி? ஏன் இந்த இனவாதம்?

மின்சாரம் தாக்கி ஒரு கிழமையில் இருவர் இறந்திருக்கிறார்கள். குளவிக்கொட்டு, சிறுத்தைப் புலி, மண்சரிவு என மலையக மக்களுக்கு பிரச்சினை. அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. நன்றாக கற்கக்கூடிய மாணவர்கள் இருக்கிறார்கள். கொக்காகல, ரோபறி, உடவேரிய, தெமோதரை, ரொசெட், தம்பதென்ன, பூனாகலை, ஐஸ்லபி, ஊவா ஐலண்ட்ஸ், நாவில, கவரவில, நமுனுகலை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஹப்புத்தளை, பண்டாரவளை போன்ற பகுதிகளிலுள்ள மாணவர்கள் பஸ் போக்குவரத்து இன்றி பாடசாலைக்கு செல்ல முடியாதுள்ளனர். தோட்டங்களில் திரிபோஷா இல்லை. சுகாதார சேவைகள் சரியாக கிடைப்பதில்லை. ஏன் மலையக மக்களை தேசிய இனமாக பிரகடனப்படுத்தப்படவில்லை? இப்படி இருக்கையில் நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதென்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? யாப்பு மாற்றத்தில் தனி அலகு மலையகத்துக்கு வேண்டும் என்றார்.

## 25 ஆயிரம் கைதிகள்...

இந்த நிலைமையை சீர் செய்வதற்காக கைதிகளை பார்வையிடும் நாட்களின் எண்ணிக்கையை குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (10) இடம்பெற்ற 09 திருத்தச்சட்டங்கள் மீதான விவாதத்தின் போது விளக்கமளித்து உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல்வேறு எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலேயே நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் திருத்தச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது நாட்டில் இல்லாத புதிய நச்சுத்தன்மை கொண்ட போதைப்பொருட்கள் இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சட்டத்தில் ஐஸ் என்ற போதைப்பொருள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த போதைப்பொருள் மிகவும் அபாயகரமானதாகும். அதேபோன்றும் இந்த போதைப்பொருளின் தன்மை குறித்து விசேட வைத்திய நிபுணர்களிடம் கேட்டறிந்திருந்தோம்.

ஏனைய போதைப்பொருட்களை விட அபாயகரமானதாக இந்த போதைப்பொருள் கருத்தப்படுவதுடன், பயன்படுத்துபவர்களின் மூளையை பெருமளவில் பாதிக்கும் தன்மை கொண்டதாகவும் இது காணப்படுகின்றது. விசேடமாக இந்த போதைப்பொருளுக்கு அடிமையாகும் ஒரு நபர் இரண்டு வருடங்கள் மாத்திரமே உயிர் வாழ்வார் என்பது விசேட மருத்துவ நிபுணர்களின் நிலைப்பாடாக காணப்படுகின்றது.

இவ்வாறான போதைப்பொருட்களின் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக சட்டத்தை அமுல்படுத்த எவ்வளவு முயற்சித்தாலும் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் ஒருசில அதிகாரிகளின் ஊழல் நிறைந்த செயற்பாடுகளின் காரணமாக சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் மீண்டும் சமூகத்துக்கு விநியோகிக்கப்படுமொரு நிலைமை காணப்படுகின்றது.

எனவே, நீதிபதிகளின் மேற்பார்வையின் கீழ் இவ்வாறான போதைப்பொருட்கள் கைப்பற்றப்படும்போது வழக்குக்குத் தேவையான மாதிரிகள், பகைப்படங்கள், சாட்சிகள் என்பவற்றை பெற்றுக்கொண்டு, மிகுதித் தொகையை அழிப்பதற்கு யோசனை முன்வைத்துள்ளோம். இதனூடாக நச்சுத்தன்மை கொண்ட போதைப் பொருட்கள் மீண்டும் மீண்டும் சமூகத்துக்குள் ஊடுருவதை தடுக்க கூடியதாக இருக்கும்.

அதேபோன்று, 18 வயதுக்கும் குறைவானவர்களுக்கு சிறைதண்டனை வழங்கி சிறைக்கு அனுப்பி வைப்பதற்கு பதிலாக, அவர்களை மறுவாழ்வளிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்காக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் பிரகாரம் இவ்வாறு கைதுசெய்யப்படும் நபர்களை நீதிமன்ற அனுமதியின்றி மறுவாழ்வளிப்பு மையங்களுக்கு அனுப்பி வைக்கும் செயற்பாடுகளில் பிரச்சினை இருக்கிறது. அவற்றை திருத்திக்கொண்டு அவர்களை மறுவாழ்வளிப்பு நிலையங்களுக்கு அனுப்பி சிறந்த மனிதர்களாக சமூகத்துக்கு விடுவிக்க முயற்சித்து வருகிறோம்.

ஹெரோயின், கொகேய்ன், மோபின் போன்ற நச்சுத்தன்மை கொண்ட போதைப்பொருட்களை வைத்திருப்பவர்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்துக்கமைய 2 கிராமுக்கு அதிகமான அளவு போதைப்பொருள் கைபற்றப்படுமாக இருந்தால் அவருக்கு மரண தண்டனை அல்லது வாழ்நாள் முழுவதுமான சிறைத்தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் நீதிமன்றத்துக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு குறித்த இரண்டுகிராம் என்ற போதைப்பொருள் தொகையை 5 கிராமாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிணை வழங்குவது தொடர்பில், 10 கிராம் வரையில் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்படும் நபரொருவருக்கு பிணை வழங்கும் அதிகாரத்தை மேன்நீதிமன்றத்துக்கு வழங்கவும், 10 கிராமுக்கும் அதிகளவு போதைப்பொருள் கைபற்றப்படுமாக இருந்தால் அவருக்கு பிணை வழங்குவதற்கான அதிகாரத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இரசாயன பகுப்பாய்வுகளின் அடிப்படையிலேயே இந்த தொகை கணக்கெடுக்கப்படும்.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் திருத்தச் சட்டத்தையும் சமர்ப்பித்துள்ளோம். 18 வயது வரையான அனைவரையும் சிறுவர்களாக கருதவும் குற்றச்செயலொன்று தொடர்பில் கைதுசெய்யப்படும் சந்தேகநபர் 18 வயதுக்கு குறைவானவர் எனில் அவரை புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதுள்ள சட்டத்துக்கமைய வாரத்துக்கு ஐந்து நாட்களுக்கு கைதிகளை பார்வையிட முடியும். தற்போதுள்ள வசதிகளுக்கமைய 13 ஆயிரம் கைதிகளுக்கு மாத்திரமே சிறைச்சாலைகளில் இடவசதி இருக்கிறது. ஆனால், தற்போது 25 ஆயிரம் வரையான கைதிகள் சிறைச் சாலைகளில் இருக்கிறார்கள். எனவே, வாரத்துக்கு ஐந்து நாட்களும் வருவதற்கு பதிலாக வாரத்துக்கு ஒருமுறை வந்து பார்வையிட யோசனை முன்வைத்துள்ளோம். பணம் படைத்தவர்களே இவ்வாறு தினந்தோறும் வந்து கைதிகளை பார்வையிடுகிறார்கள். ஆனால், பணம் இல்லாதவர்கள் மாதத்துக்கு ஒருமுறையோ அல்லது வசதி இருக்கும்போதே கைதிகளை வந்து பார்வையிடுகிறார்கள். ஒருசிலரை வந்து பார்வையிடுவதற்கு எவரும் இல்லாதவொரு நிலைமையும் இருக்கிறது. விசேட குழுக்களை நியமித்து ஆலோசனைகளைப் பெற்றே இந்த யோசனையை முன்வைத்துள்ளோம்.

## அடுத்த சுதந்திர தினத்திற்குள்...

அடுத்த வருடம் கொண்டாடப்படும் 75 ஆவது சுதந்திர தினத்தின்போது இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, வெளிநபர்கள் எமது நாட்டு பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை என்றும் நாமே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொப் - 27 மாநாடு, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை, கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்ததோடு, எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம், உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனவரி, பெப்ரவரி மாதமளவில் இது தொடர்பான சட்டங்களை சமர்ப்பிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முழுமையான உரை வருமாறு,

எமது சட்டங்களை மறுசீரமைக்க வேண்டும். அந்த பொறுப்பு நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியே இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திலும் அடுத்த வருடத்திலும் அவர் நாடாளுமன்றத்தில் அவை அனைத்தையும் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கிறேன். நாடாளுமன்றத்தை மேலதிக நாட்களில் கூட்டியாவது இவற்றை நிறைவேற்றுமாறு கோருகிறேன். சட்டங்களை புதுப்பிக்க வேண்டும்.

இளைஞர்களின் உரிமைகளை புறக்கணித்தால் அதுதான் மிகவும் மோசமான இனப்படுகொலையாக இருக்கும். எனவே இலங்கையைப் பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பம் வரும்போது நாம் இவை பற்றி எடுத்துக்கூறுவோம். அதை நான் இனப்படுகொலையிலும் இனப்படுகொலையிலும் இனப்படுகொலையென்றே கூறுவேன்.

நாம் எமது பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டம் , உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் புதிய சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். ஜனவரி,பெப்ரவரி மாதமளவில் இரு அமைச்சர்களும் இதனை சமர்ப்பிக்க உள்ளனர்.

வடக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலரை விடுதலை செய்துள்ளோம். மேலும் சிலர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர். எழுத்தாளர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு எதிரான வழக்கு உள்ளது. வழக்கு நிறைவடைந்த பின்னர் அவர் தொடர்பிலும் செயற்படுவோம். இந்தப்பிரச்சினைகளை தீர்ப்பதே எமது நோக்கமாகும்.

2019 இல் எமது ஆட்சி நிறைவடைகையில் காணமல் போனோர் தொடர்பில் 65 கோப்புகள் தான் எஞ்சியிருந்தன. தற்பொழுது 2000 பேர் தொடர்பான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தேவையானால் மேலும் நபர்களை நியமித்து எஞ்சியவற்றையும் பூர்த்தி செய்ய முடியும். அவற்றை துரிதமாக நிறைவு செய்யுமாறு நீதி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். இவை தொடர்பில் எமக்கு மேலும் ஆராய முடியும்.இதற்கான ஒரே வழி விசாரணைகளுக்காக மேலும் பல குழுக்களை நியமிப்பதேயாகும். அது மட்டுமே இதற்குள்ள ஒரே தீர்வு. அடுத்த வாரமளவில் வடக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று உள்ளது. எனது நல்ல நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதில் பங்கெடுப்பார் என நினைக்கிறேன். அவர் அதில் அரைவாசி வரை பயணித்தால் கூட பெரிய விடயமாக இருக்கும்.

வடக்கிற்காக நாம் பல அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுள்ளோம். அதற்கான மதிப்பீடுகளும் எம்மிடமுள்ளன. வடக்கில் புதுப்பித்தக்க சக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

திருகோணமலையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இவை யாவும் இலங்கையர்களாகிய நமக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன

75 ஆவது சுத்திர தின கொண்டாட்டத்தின்போது இந்தப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். யாரும் எமது நாட்டு பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை. எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றார்.

இதேவேளை, வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் சர்வசேத நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பில் எதிர்த்தரப்பு பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

இதற்கு முன்னர் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் மாத்திரம்தான் செல்ல வேண்டும். ஆனால் தற்பொழுது ஏனைய நாடுகளுடனும் பேச வேண்டியுள்ளது. ஜப்பான்,சீனா மற்றும் இந்தியா என்பன பரிஸ் கழக அங்கத்துவ நாடுகளல்ல. அந்த பேச்சுவார்தைகளிலும் திருத்தங்கள் வரலாம். அவர்கள் இலக்கு ஒன்றை தந்துள்ளனர். இது 4 வருட திட்டமாகும்.

உடன்பாடுகள் நிறைவடையும் வரை ஒப்பந்தத்தை வெளியிடக் கூடாது என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. இலக்குகளை அடைவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனவே. அதிலுள்ள இலக்குகள் ஒருபோதும் மாறாது. சீனாவும் இந்தியாவும் என்ன சொல்லப் போகின்றன என்று தெரியாது. மூன்று முக்கிய தரப்புகள் மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச வேண்டியுள்ளது. அதன் பின்னர் அறிவிப்போம் என்றார்.

விமல் வீரவங்ச எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, தனிப்பட்ட கடன் , சர்வதேச அமைப்புகளிடம் இருந்து பெற்ற கடன் மற்றும் இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் பெற்ற கடன் குறித்து கவனம் செலுத்த வேண்டும். இரு தரப்பு கடன் இதில் பிரதானமானது. வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள போதும் அது உடன்பாட்டுக்கு வரும் என கருதுகிறோம். தனிப்பட்ட கடன் தொடர்பில் சிக்கல் இருக்கும் என்று கருதவில்லை. பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏதாவது ஒரு நாடு உடன்படாவிட்டால் ஏற்படும் தாக்கம் குறித்து விமல் வீரவங்ச எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

இங்கு இரண்டு மாற்றுவழிகள்தான் உள்ளன. கடனை இரத்துச் செய்வதா அல்லது கடனை மீளச் செலுத்தும் காலப்பகுதியை நீடிப்பதா ஆகிய இரண்டு வழிகள் குறித்தே ஆராயப்படும். அதில் ஒரு மாற்று வழியை தேட முடியுமாக இருக்கும் என்றார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கும் உதவியில் மாற்றம் வரும் நிலையில் அதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என சந்திம வீரக்கொடி எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, குறிப்பிட்ட எல்லைக்குள் தான் நாம் செயற்படுகிறோம். அந்த எல்லைக்கு மாற்றமாக ஏதும் நடந்தால் நாம் அது பற்றி அறிவிப்போம். மக்கள் மீது அதிக சுமையேற்றுவதா? நேரடி வரியை அதிகரிப்பதா? என்பது குறித்தும் அரசின் செலவுகளை குறைப்பது தொடர்பிலும் தான் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த மூன்று வழிகள் தான் உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# கனடாவுக்கு அனுப்ப ரூ.20 இலட்சம் வரை சுருட்டிய கடத்தல்காரர்கள்

## வியட்நாம் இராணுவ முகாமுக்குப் போக மறுத்த இலங்கையர்கள்



கனடாவிற்கு அகதிகளாக சட்டவிரோதமாக பயணித்த 303 இலங்கையர்கள், தற்போது வியட்நாமிலுள்ள இராணுவ முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 10 மணித்தியால நடவடிக்கையின் மூலம் அவர்களை பாதுகாப்பாக மீட்டதாக வியட்நாமின் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.

இந்த மீட்புப்பணி பற்றிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

நவம்பர் 5ஆம் திகதி ஸ்ப்ராட்லி தீவுகளுக்கு அப்பால் 300க்கும் மேற்பட்ட இலங்கையர்களுடன் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த மீன்பிடிக் கப்பல் பற்றிய தகவல் வெளியானது.

சட்டவிரோத ஆட்கடத்தலை ஒருங்கிணைத்த தரப்பினர், அந்த முயற்சி தோல்வியடைந்ததும், அகதிகளை காப்பாற்றும் தகவலை ஊடகங்களுக்குக் கசிய விட்டிருந்தனர்.

யுத்தத்தின் பின்னர் இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளில் தங்கியிருந்த கணிசமான முன்னாள் போராளிகள் மற்றும் இலங்கையிலிருந்த முன்னாள் போராளிகள், இலங்கையிலிருந்த பொதுமக்கள் அந்தப் படகில் பயணித்தனர்.

படகுப் பயணத்தில் பல முன்னாள் போராளிகளுக்கு இலவசப் பயண வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 14 இலட்சம் ரூபா தொடக்கம் 20 இலட்சம் ரூபா வரை பல்வேறு அளவில் பணம் செலுத்திய பலரும் அந்தப் படகில் பயணித்துள்ளனர்.

மியன்மாரில் கைவிடப்படும் நிலையிலிருந்த லேடி R-3 என்ற ஆழ்கடல் மீன்பிடி படகு மலிவு விலையில் வாங்கப்பட்டு, இந்த கடல் பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடல் கொந்தளிப்பு, இயந்திரக் கோளாறு காரணமாக ஆட்கடத்தல்காரர்கள் திட்டமிட்டதை போல பயணம் அமையவில்லை. படகு புறப்பட்டு 3 வாரங்களாகியும் தென்சீனக் கடலிலேயே பயணித்துக் கொண்டிருந்தது.

கடல்கொந்தளிப்பு காரணமாக இயந்திர அறை சேதமடைந்து நீர் உட்புக ஆரம்பித்தது.

அதே சமயத்தில் கொண்டு சென்ற உணவும், தண்ணீரும் முடிந்து விட்டது. கப்பலில் இருந்தவர்கள் கொந்தளிக்க ஆரம்பித்தனர். இனிமேல் பயணத்தை தொடர முடியாதென்ற நிலையேற்பட்டதும், கனடா கடற்படை தம்மை மீட்க வேண்டுமென அகதிகள் கோரும் தகவலை கடத்தல் ஏற்பாட்டாளர்கள் கசிய விட்டனர்.

எனினும், அது சாத்தியமாகாது என்பது புரிந்ததும், அகதிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்னிலைப்படுத்தப்பட்டது. அபாயத்தின் உச்சத்தில் வியட்நாமிலுள்ள இலங்கை தூதரகத்திடம் கப்பலில் இருந்தவர்கள் உதவி கோரியதையடுத்து, விடயம் இலங்கை கடற்படையின் கவனத்திற்கு





வந்தது.

கொழும்பிலுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடினர்.

கப்பல் தரித்து நின்ற பகுதி வியட்நாமிற்கு அருகிலுள்ள கடற்பகுதி என்பது தெரிய வந்ததும், வியட்நாம் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையம், மீட்பு நடவடிக்கையை ஒருங்கிணைக்க ஆரம்பித்தது.

திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஜப்பானியக் கொடியிடப்பட்ட ஹீலியோஸ் லீடர் அந்தப் பகுதியில் இருப்பதைக் கண்டறிந்ததையடுத்து, கப்பலில் இருந்தவர்களை ஒரு மாற்றுப்பாதையில் சென்று மீட்கும்படி கோரியது.

வியட்நாமின் தெற்கு வுங் டௌ நகரின் தென்கிழக்கில் சுமார் 258 கடல் மைல் (470 கி.மீ.) தொலைவில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகள் படகை, ஜப்பானியக் கப்பலான ஹீலியோஸ் லீடரால் திங்கட்கிழமை கண்டுபிடித்தது.

ஜப்பானிய கப்பல், பாதிக்கப்பட்ட லேடி R3 படகை அடைந்தபோது மீன்பிடிப் படகில் இருந்தவர்கள் பீதியில் இருந்தனர்.

மீன்பிடிப்படகில் இருந்தவர்களுக்கு தேவையானவர்களுக்கு மருத்துவ உதவியும் அளித்தது. பின்னர் அகதிகள் ஜப்பான் கப்பலில் ஏற்றப்பட்டு கரை நோக்கி பயணித்தனர்.

பின்னர், வியட்நாமின் எல்லையில், வியட்நாமின் SAR 413 கப்பலுக்கு மாற்றப்பட்டு, வுங் டௌ பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். செவ்வாய்க்கிழமை மாலையில் அவர்கள் கரையை அடைந்தனர்.

264 ஆண்கள், 19 பெண்கள் மற்றும் 20 குழந்தைகள் இவ்வாறு மீட்கப்பட்டனர்.

கடல் சீற்றம் காரணமாக அகதிகள் பயணித்த படகின் இயந்திர அறையில் சேதம் ஏற்பட்டு, கடல் நீர் நுழைந்ததையடுத்தே, கப்பல் மூழ்கும் அபாயத்தை சந்தித்தது.

கரைக்கு கொண்டு வந்ததும், அவர்களின் மருத்துவ நிலை கண்காணிக்கப்பட்டு, உணவளிக்கப்பட்டது. அவர்களை ஐஓம் மற்றும் இலங்கை தூதரகத்தினர் சந்தித்தனர்.

303 இலங்கையர்களையும் வுங் டௌ பகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அங்கு செல்ல மாட்டோமென இலங்கையர்கள் மறுப்புத் தெரிவித்தனர். இவர்களை சமரசப்படுத்த இலங்கை துதரக அதிகாரிகளும், ஐஓம் அதிகாரிகளும் நீண்ட நேரம் பிரயத்தனப்பட்டனர்.

பின்னர் ஒருவழியாக இலங்கையர்கள் சம்மதித்ததை தொடர்ந்து, பஸ்கள் மூலம் இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அகதிகள் படகு ஆபத்தில் சிக்கியுள்ளதாக தகவல் கிடைத்த பின்னர் 10 மணித்தியால மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டு, அகதிகளை பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்ததாக வியட்நாம் தெரிவித்துள்ளது.

படகில் பயணித்த 37 வயதான வி.மோகனசுவேந்தன் வியட்நாம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது, தான் ஒரு விவசாயி என்றும், நல்ல வாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கையில், கனடாவுக்கு குடிபெயர்வதற்காக இடைத்தரகர் ஒருவருக்கு 15 இலட்சம் ரூபா கொடுத்ததாக கூறினார்.

நான்கு நாட்களுக்கு முன்பு கப்பலில் ஓட்டை ஏற்பட்டு, நீர் புகுந்தது. அந்த சமயத்தில் உணவு மற்றும் தண்ணீர் தீர்ந்து போனது. எம்மை இலங்கைக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்றார்.

38 வயதான கேசவன், ஒரு முகவர் நிலையம் தனக்கு கடவுச்சீட்டு செய்து, அவரையும் மற்றவர்களையும் ஒரு பஸ்ஸில் ஏற்றி ஒக்டோபர் 9 அன்று லேடி R-3 படகிற்கு அழைத்து சென்றதாக கூறினார்.

அவர் பயணத்திற்கு ரூ.20 இலட்சம் கொடுத்ததாக கூறினார்.

கப்பல் பழைமையானது. சிறியது, அதில் அளவிற்கு அதிகமானவர்கள் ஏற்றப்பட்டுள்ளனர் என்றார்.

கப்பலுக்குள் தண்ணீர் புகுந்ததும், அதன் தரை விரிசல் அடைந்ததும், அனைவரும் பயத்தில் அலறினர். ஆனால், நாங்கள் இப்போது பாதுகாப்பாக இருக்கிறோம், எங்களுக்கு உதவியதற்கும் உபசரித்ததற்கும் நன்றி என்று அவர் கூறினார்.

மீட்கப்பட்ட மக்களுக்கு போதிய உணவு மற்றும் சுகாதாரம் தேவை என இலங்கை இராஜதந்திரிகள் மற்றும் ஐ.நாவின் கீழ் உள்ள இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு கூறியுள்ளது.

பா ரியா-வுங் தாவ் மக்கள் குழுவின் துணைத் தலைவரான Nguyen Cong Vinh, மீட்கப்பட்ட மக்கள் உள்ளூர் அதிகாரிகளால் நன்கு கவனிக்கப்படுவார்கள் என்றார்.

வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் Le Thi Thu Hang, வியட்நாமிய சட்டம் மற்றும் சர்வதேச விதிமுறைகளின்படி மனிதாபிமான ஆதரவை வழங்குவதற்கு அமைச்சகம் சர்வதேச அமைப்புகள் மற்றும் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பதாகத் தெரிவித்தார்.

# தாமதமாகியுள்ள ஓய்வூதியப் பணிக்கொடையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன அறிவிப்பு

ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்கும்போது கடந்த காலத்தில் காலதாமதமாகியிருந்ததை சரிசெய்வதற்கு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு அமைய திறைசேரியின் அனுமதியைப் பெற்று இரண்டு பகுதிகளாக இக்கொடுப்பனவுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற (08) அந்த அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்குவது காலதாமதமாவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும் வகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியில் திறைசேரியினால் நிதியை விடுவிப்பதில் உள்ள தாமதம் காரணமாக ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெறுவதற்கு அதிகமானவர்கள் இதுவரை காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் இங்கு தெரிவித்தார். தற்பொழுது 2022 ஜனவரி வரையான அனைத்துக் கொடுப்பனவுகளையும் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மேலும், 2022 ஜனவரி முதல் எஞ்சிய காலத்துக்குத் தேவையான நிதியை விடுவிப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அதற்கமைய அந்த நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, ஓய்வூதிய வயதை 60 வயது வரை குறைத்தமை காரணமாக இந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியை அடுத்து புதிய விண்ணப்பங்கள் வரும் என எதிர்பார்ப்பதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். அவர்கள் அனைவருக்கும் அடிப்படை ஓய்வூதியத்தை விரைவாக வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் நீண்ட காலம் பணியாற்றிய ஊழியர்களின் சிக்கல்களை தீர்ப்பது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, எதிர்கால செயற்பாடுகளை பரிந்துரைப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அதேபோன்று, தற்பொழுது தாமதமாக காணப்படும் அரசாங்க நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை விரைவாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். மேலும், ஏனைய அரச நிறுவனங்களுக்கு இது தொடர்பில் அறிவித்து தாமதமாகியுள்ள அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பது என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

பல்வேறு நகர சபைகள் மாநகர சபைகளாகத் தரமுயர்த்தும் பிரதமரின் வேலைத்திட்டம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன, வடமாகாணத்தில் இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளமை தொடர்பில் பாராட்டைத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாநகரசபையாகத் தரமுயர்த்தப்படும்போது மன்னார் பிரதேச சபையை இரத்துச் செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலகப் பிரிவை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்தார். இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த, இராஜாங்க அமைச்சர்களான சாந்த பண்டார, இந்திக்க அனுருத்த, அனுப பஸ்குவல் ஆகியோரும் குழுவின் உறுப்பினர்களான ரஞ்சித் மத்துமபண்டார, ஜே.சி.அலவதுவல, ஜயந்த கெடகொட, சுதத் மஞ்சுள ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், மனோ கணேசன், சந்திம வீரக்கொடி, யதாமினி குணவர்தன, எச்.எம்.எம். ஹரீஸ், ரோஹண பண்டார, மதுர விதானகே, சார்ள்ஸ் நிர்மலநாதன், குணதிலக ராஜபக்ஷ உள்ளிட்ட உறுப்பினர்களும் அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.







# திருமலை – கண்டி பிரதான வீதியில் சொகுசுக் காரில் திடீர் தீப்பரவல்

**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் திடீரென சொகுசுக் கார் ஒன்று தீப்பிடித்ததாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் ஆண்டாங்குளம் பிரதேசத்தில் நேற்று (10) பிற்பகல் 2 மணியளவில் குறித்த சொகுசுக் கார் தீப்பிடித்ததாகத் தெரியவருகின்றது.



குறித்த காரில் சாரதி மாத்திரம் பயணித்திருந்ததாகவும், தீப்பிடித்ததில் கார் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், குறித்த காரில் ஏற்பட்ட தீப்பரவல் பொதுமக்களின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த காரில் தீப்பரவியமைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான பிரித்தானிய வர்த்தகத் தூதுவர் கொழும்பில்

இலங்கைக்கான பிரித்தானிய வர்த்தகத் தூதுவர் லோர்ட் டேவிஸ் (Lord Davies) 03 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.



இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கிலான கலந்துரையாடல்களில் இலங்கைக்கான பிரித்தானிய வர்த்தக தூதுவர் ஈடுபடவுள்ளார்.

லோர்ட் டேவிஸ் வர்த்தக, அரச பங்குதாரர்களை சந்தித்து புதிய வாய்ப்புகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு வணிக புரிந்துணர்வை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாகவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. லோர்ட் டேவிஸை இலங்கைக்கான பிரித்தானிய வர்த்தகத் தூதுவராக 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நியமித்திருந்தார்.



**யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள காலநிலை மாற்றம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் (10) இடம்பெற்றது.**

**யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், யாழ். மாவட்டத்துக்குட்பட்ட பிரதேச சபை தவிசாளர்கள், முப்படையினர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 11ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# பொருளாதார நெருக்கடி தீர இந்திய உதவி தொடர வேண்டும்

இந்தியாவின் அதானி குழுமம், அதன் உள்ளூர்ப் பங்குதாரரான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் இணைந்து கொழும்புத் துறைமுக மேற்கு கொள்கலன் முனையத்தை (WCT) கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

700 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டிலான இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் (09) முற்பகல் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. இது நிர்மாணித்தல், செயற்படுத்தல், பரிமாற்றம் செய்தல் (BuildOperateTransfer: BOT) திட்டமாகும். அந்த வகையில், இது இலங்கையில் முதலாவது இந்திய துறைமுக இயக்குனர் நிறுவனமாக இருக்கும் என்பதுடன், இக்கூட்டு முயற்சியில் அது 51% பங்கை கொண்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனியார் மற்றும் அரச கூட்டிணைவின் மூலம் கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில், இலங்கைத் துறைமுக அதிகாரசபை (SLPA) மற்றும் இந்திய மற்றும் ஜப்பானிய அரசாங்கங்களால் பரிந்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுடன் இணைந்து கடந்த வருடம் அமைச்சரவையில் வழங்கப்பட்ட அனுமதிக்கமைய, பொது தனியார் நிறுவனமாக அதனை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

அதன்படி, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உருவாக்கம், இயக்குதல் மற்றும் பரிமாற்றத் திட்டம், முதலீட்டாளர்களை பரிந்துரைக்க இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்திய அரசாங்கம் இதற்காக அதானி குழுமத்தைப் பெயரிட்டிருந்தது.

அதானி குழுமம் மற்றும் Special Economic Zone Limited (APSEZ Consortium) ஆகியவற்றின் முன்மொழிவுகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் அங்கீகரித்திருந்தது. ஜப்பானிய அரசு இதற்காக எந்தவொரு முதலீட்டாளரையும் முன்வைக்காத நிலையில், இதனை அதானி குழுமத்துடன் இணைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதம் கொழும்பு துறைமுகத்தின் WCT ஆனது இந்தியாவின் அதானி போர்ட்ஸ் மற்றும் ஸ்பெஷல் எகனாமிக் ஸோன் லிமிடெட் (APSEZ Consortium) அதன் உள்ளூர் பிரதிநிதியான John Keells Holding PLC மற்றும் SLPA ஆகியன இணைந்து ஒரு பொது தனியார் லிமிடெட் நிறுவனமாக உருவாக்க அனுமதியளிக்கப்பட்டது.

மேற்கூறிய பங்குதாரர்களுடன் 35 வருடத்திலான நிர்மாணித்தல், இயக்குதல், பரிமாற்றம் செய்தல் (BOT) அடிப்படையில் குறித்த முனையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இத்துறைமுக முனையம் 1,400 மீற்றர் நீளமும், 20 மீற்றர் ஆழமும் கொண்டதாக அமையவுள்ளது. மிகப் பெரிய கொள்கலன் கொண்டு செல்லும் கப்பல்களை கையாளும் ஒரு பிரதான சரக்கு பரிமாற்ற தளமாக இது மாறுமென அதானி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவித்துள்ளது.

இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியில் தவித்துக்கொண்டிருக்கும் மிக முக்கியமான இந்தக் காலகட்டத்தில் இத்துறைமுக அபிவிருத்தியும், இந்தியாவின் அனுகூலங்களும் பெரும் நன்மையைத் தரும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்த இந்த திட்டம் இப்போது நடைமுறை அளவில் வந்துள்ளமை இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளில் மேலும் உந்துசக்தியினையே தரும்.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் இந்தியாவிற்கு கிடைத்தமையானது, அந்நாட்டுக்கு மிகப் பெறுமதியானது. கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களின் ஊடாக கொண்டு வரப்படும் சரக்குகளில் பெருமளவானவை, இந்தியாவிற்கே மீண்டும் கொண்டு செல்லப்படுகின்றன. கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையமானது, மிக பெரிய பரப்பளவை கொண்டுள்ளமையினால், இந்தியாவின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு முனையத்தின் ஒரு பகுதி ஏற்கனவே சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதியை சீனா மிகச் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகிறது. இந்தநிலையில், சீனாவை விடவும், சிறந்த முறையில் துறைமுகத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமாயின், சீனாவின் போட்டி நாடுகளான இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து இதனை செயற்படுத்த வேண்டிய கட்டாயமும் இலங்கைக்கு உள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து பெருமளவிலான பொருட்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு கொண்டு செல்லப்படும் நிலையில், அந்த இடத்தில் சீனாவின் ஆதிக்கம் இருப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது.

இந்தியாவிற்கு கொழும்புத் துறைமுகம் தொடர்பில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக ஒரு கரிசனை காணப்படுவது இரகசியமல்ல. இந்தியாவிற்கு ஏற்கனவே கிழக்கு முனையத்தை வழங்க உத்தேசித்திருந்த போதிலும், உள்நாட்டில் எழுந்த எதிர்ப்புகளினால் அத்திட்டத்தை இலங்கை அரசாங்கம் கைவிட்டிருந்தது.

இதுவரை அபிவிருத்தி செய்யப்படாத மேற்கு முனையத்தையே இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இலங்கை வழங்கியது. மேற்கு முனையம் கொழும்புத் துறைமுகத்திலேயே மிகப் பெரிய நிலப்பரப்பை கொண்ட ஓர் இடம். அங்கு இதுவரை எந்தவொரு வளர்ச்சி நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விடவும், மேற்கு முனையமானது, இந்தியாவிற்கு மிகவும் நன்மை தரக்கூடியது. இந்தியாவுடன் ஜப்பான் இணைந்து, மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்து தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, தெற்கு முனையத்தை செயற்படுத்தும் சீனாவிற்கு அது சவாலாக அமையும். இத்திட்டத்தின் ஊடாக இலங்கை வலயத்திலேயே மிகவும் பாதுகாப்பான நாடாகவும் விளங்குவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

பொருளாதார ரீதியில் 35 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு சொந்தமான சொத்தொன்று உருவாகும் வாய்ப்புள்ள அதேசமயம், ஆசியாவில் போரொன்று ஏற்படும் பட்சத்தில் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்நாட்டில் முதலீடு செய்துள்ளமையினால், நாட்டின் துறைமுகங்கள் மிகவும் பாதுகாப்பாகக் காணப்படும். முக்கியமாக இலங்கைக்கு இதுவொரு பாதுகாப்பாகக் காணப்படும்.

இந்தியாவைப் பொறுத்தவரை கடந்தகாலங்களில் இலங்கை மீண்டெழ உதவிய நல்ல நண்பன் இந்தியா. அந்த உதவிகள் ஆக்கபூர்வ முறையில் தொடரவேண்டும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் அதனோடு தீரவேண்டும் என்பதே அனைவரினதும் அவா.



# வெட்டப்படும் பட்டாம்பூச்சிகள்!

அண்மைக்காலமாக நாளிதழ்களைத் திறப்பதற் குக் கரங்கள் நடுங்குகின்றன. காரணம், முதல் பக்கத்திலேயே ரயிலிலிருந்து தள்ளப்பட்ட பெண்ணின் இரத்தமும், ரயிலடியில் கழுத்தறுக்கப்பட்ட பெண்ணின் இரத்தமும் படிக்கின்ற கண்களை இரத்தம் கசிய வைக்கின்றன. பட்டாம்பூச்சிகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் வெட்டரிவாள் கொண்டு வெட்டுவதுபோல், பெண் பிள்ளைகள் வெட்டிப் போடப்படுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஒரு காலத்தில் பிள்ளைகள் குருகுலவாசத்தில் விடப்பட்டார்கள். குருகுலத்தில் ஆசான்கள், பாடம் போதிப்பதோடு மட்டுமின்றி, தாங்கள் வாழும் வாழ்க்கையாலும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் போதித்தார்கள்.

இன்றைக்கும்கூட திருப்பராய்த்துறை தபோவனத்திலோ, இராமகிருஷ்ண மடத்து உறைவிடப் பள்ளியிலோ படிக்கச் செல்லும் பிள்ளைகள் படிப்பு முடிந்து "ஒளி படைத்த கண்ணினர்" களாகவே திரும்புகின்றனர்.

இன்றைக்குப் பல குடும்பங்களில் பிள்ளைகள் வளர்கிறார்களே தவிர, வளர்க்கப்படுவதில்லை. இரண்டு கால்களும் வளர்வதற்கு முன்னர், இரண்டுச் சக்கர வாகனங்களை வாங்கிக் கொடுத்துவிடுகின்றனர் பெற்றோர். விளையாடுவதற்கு கைப்பந்து வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாக, கைபேசியை வாங்கிக் கொடுத்து விடுகின்றனர்.

ஒரு நல்ல தாயால்தான், நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியும் என்பதை பாவேந்தர் பாரதிதாசன்,

***பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்***
***அவள் வாத்திச்சி; அறைவீடு கழகம்***
***தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை; அள்ளி***
***விழுங்கினர் பிள்ளைகள்***

என "குடும்ப விளக்கில்" விளக்கியிருக்கிறார்.

பெரியபுராணத்தில் அப்பூதியடிகளின் இல்லத்திற்கு அப்பரடிகள் எழுந்தருளுகின்றார். அவருக்கு உணவு படைப்பதற்காகத் தம் மகன் மூத்த திருநாவுக்கரசை, வாழையிலை அறுத்து வரும்படியாக அப்பூதியடிகள் பணிக்கின்றார். அப்போது அந்த நன்மகன் "நல்ல தாய் தந்தை ஏவ, நான் இது செய்யப் பெற்றேன்" என்று விரைந்து செல்கின்றார். வாழ்வியலில் பெற்றோர்கள்தாம் தம் பிள்ளைகளில் இது நல்லபிள்ளை, அது கெட்டபிள்ளை எனச் சொல்லக் கேட்டு வருகிறோம். ஆனால், முதன்முதலாக ஒரு பிள்ளை, தம் பெற்றோரை, "நல்ல தாய் தந்தை" என்று சொல்வதை பெரிய புராணத்தில்தான் கேட்க முடிகிறது.

அப்பூதியடிகளும் அவருடைய மனைவியும் போன்ற பெற்றோர் அமைந்தால், பிறக்கின்ற பிள்ளைகள், பெண்களைக் கொலை செய்வார்களா? போதைப்பொருளுக்கு அடிமையாவார்களா?

தெய்வப்புலவர் திருவள்ளுவர், "பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற" எனப் பாடியது, அறிவறிந்த பெற்றோர்களால் தான் அறிவார்ந்த மக்களைப் பெற முடியும். பொறுப்பற்ற பெற்றோர்களுக்கு அது வாய்க்காது என்பதை உணர்த்துவதற்கேயாகும்.

குடும்பத்தில் பூகம்பத்தை உருவாக்காத முதிர்ச்சி பெற்ற காதல் என்றால், அதனைப் பெற்றோர் ஆதரிக்க வேண்டும் என்பதை பாவேந்தர் பாரதிதாசன்,

***"மாவடு நிகர்விழிச்***
***சின்னஞ் சிறுமியே நீ,***
***மங்கை எனும் பருவம் கொண்டு,***
***வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு,***
***தேவை இவன் எனவே செப்பும் மொழி***
***எனக்குத் தேன்கனித் தித்திக்கும் கற்கண்டு"***

என, ஒரு தந்தை மகளுக்குச் சொல்வதாக அமைந்த பாடல், வெற்றி பெற்றால், பட்டாம்பூச்சிகள் வெட்டுக்கத்தியால் வெட்டப்பட மாட்டாது.

மராட்டிய மாநிலத்தின் காண்டேகர், நாடறிந்த நாவலாசிரியர். என்றாலும், அவருக்குக் காதல் என்ற கோட்பாட்டில் நம்பிக்கைக் கிடையாது. என்றாலும், காதல் பற்றி அவர் தம் நாவல்களில் தெரிவித்திருக்கும் கருத்துகள், தற்காலத் தமிழர் வாழ்வுக்குக் கலங்கரை விளக்குகளாக உள்ளன.

ஒரு நாவலில் "காதல் என்பது கானல் நீர் போன்றது. அதை நோக்கி ஓடுகின்ற மான்கள், வயிறு வெடித்துச் சாகின்றன" என்றெழுதுகிறார்.

'புயலும் படகும்' எனும் நாவலில், "கடலில் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் படகுகள், கடுமையான புயல் வீசும்போது ஓரிடத்தில் வந்து கூடுகின்றன. புயல் தணிந்தவுடன் அந்தந்த படகுகள் எந்தெந்த திசையை நோக்கிப் பயணிக்க வேண்டுமோ, அந்தந்த திசைக்குச் சென்றுவிடுகின்றன. அதுபோலத்தான் காதலும். வெவ்வேறு நோக்கில் பயணிக்கின்ற ஆடவரும் பெண்டிரும் காதல் எனும் புயல் வீசும்போது சந்திக்கின்றனர். வேகமும் தாகமும் தணிந்த பின்னர் அவரவர் செல்ல வேண்டிய திசைக்குச் சென்று விடுகின்றனர்" என்கிறார்.

'யயாதி' எனும் நாவலில், "எப்படி கத்தியும் கத்தரிக்கோலும் சிறுபிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்கள் அல்லவோ, அது போன்றுதான் காதலும் ஆண் - பெண்களின் விளையாட்டுப் பொருளல்ல" என்றெழுதுகிறார். நம் நாட்டு இளைஞர்கள் காண்டேகரின் கருத்துகளை ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, சில நிமிடங்கள் அவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பது நன்று.

"பெற்றோர்கள்தாம் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு இரண்டாவது பெற்றோர்" என ஆங்கிலத்தில் ஒரு வாசகம் உண்டு. இராமாயணத்தில் இராமனை "நடையில் நின்றுயர் நாயகன்" என்பார் கம்பர். அதற்குக் காரணம், அந்த இராமனுக்குக் கற்பித்த குரு வசிஷ்டர். இராமன் எப்படிப்பட்ட மாப்பிள்ளை என்பதை ஜனகனுக்குச் சொல்ல வந்த விசுவாமித்திரர், "உபநயன விதி முடித்து, மறை ஓதுவித்து, இவனை வளர்த்தானும் வசிஷ்டன் காண்" எனக் கற்பித்த ஆசாரியரின் பெருமையைக் கூறி, மாணவனின் நடத்தைக்குச் சான்று பகருகிறார்.

கடந்த 40 ஆண்டுகளாகவே புனிதமான ஆசிரியப் பணியில் சில காமுகர்களும் நுழைந்ததனால், கன்னிப்பெண்கள் எமன் வாய்க்குள் வலிந்து தள்ளப்படுகின்றனர். பாவேந்தர் பாரதிதாசனே இதனைக் கண்டு குமுறி, "கல்லாரைக் காணுங்கால், கல்வி நல்காக் கசடர்க்கும் தூக்குமரம் அங்கே உண்டாம்" எனப் பாடியிருக்கிறார்.

பெண்கொலை என்பது காலங்காலமாகவே நடந்து வருகிறது. அன்று ரயிலில் இருந்து தள்ளுவதற்குப் பதிலாக, ஆற்றிலும் குளத்திலும் தள்ளியிருக்கிறார்கள். சங்க காலத்தில் நன்னன் என்றொரு குறுநில மன்னன் இருந்தான். தோட்டத்திலிருந்து விழுந்த ஒரு மாங்கனியை, ஒரு பெண் உண்டதற்காக அவளைக் கொலை செய்துவிட்டான் அந்தக் கொடுங்கோலன். ஊர் மக்கள் எல்லாம் கூடி, அவள் எடைக்கு எடை தங்கமும் 81 யானைகளும் தருவதாகக் கூறியும், அக்கொடுங்கோலன் அவற்றைக் கேட்க மறுத்து, அவளைக் கொலை செய்துவிட்டான். அதனை சங்கப்புலவர் பரணர் "பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான், பெண்கொலை புரிந்த நன்னன்" என அகநானூற்றில் பாடி வைத்துள்ளார். அக்கொலைக்குப் பிறகு அவனை "பெண்கொலை புரிந்த நன்னன்" எனத் தூற்றத் தொடங்கினர். மேலும், அக்கொலைக்குப் பிறகு அவன் வம்சமே அழிந்துவிட்டதாம்.

மகாகவி பாரதியார், பாஞ்சாலி சபதத்தைப் பாடியது, அன்றைய பாஞ்சாலிக்காக மட்டுமன்று. அவன் காலத்துப் பாஞ்சாலிகளுக்கும் சேர்த்துத்தான்! பாஞ்சாலி சபதத்தில் துச்சாதனன் ஒற்றை ஆடையிலிருக்கும் பாஞ்சாலியை அவைக்கு இழுத்து வந்து துகிலுரிவதை,

***ஆடை குலைவுற்று நிற்கிறாள் - அவள்***
***ஆவென்று அழுது துடிக்கிறாள் - வெறும்***
***மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்***
***மைக்குழல் பற்றி இழுக்கின்றான்***
***கக்கக் கவென்று கனைத்தே பெருமூடன்***
***பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி***
***கூந்தலினைக் கையினால் பற்றிக்***
***கரகரெனத் தானிழுத்தான்***
***ஐயகோ வென்றே அலறி உணர்வற்றுப்***
***பாண்டவர்தம் தேவியவள், பாதியுயிர்***
***கொண்டுவர, நீண்ட***
***கருங்குழலை நீசன் கரம்பற்றி***
***முன்னிழுத்துச் சென்றான்***

என வர்ணிக்கிறார்.

அன்றைய பாஞ்சாலிக்கு ஏற்பட்டதுதான், இன்றைய நிர்பயாவுக்கும் சுவாதிக்கும் நிகழ்ந்தது. அன்றைக்கு அஸ்தினாபுரத்து மக்கள் பாஞ்சாலியின் துயரத்தை எண்ணி நெட்டை மரங்கள் என நின்று புலம்பினார்களாம். இன்றைக்கிருக்கின்ற நெட்டை மரங்களும் நின்று புலம்புவதற்குப் பதிலாக கைபேசியில் தற்படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாவரும் கைவிட்ட நிலையில் பாஞ்சாலி, கதறி அழுததை பாரதியார்,

"பெண்டீர் தமையுடையீர்! பெண்களுடனே பிறந்தீர்!

பெண்பாவம் அன்றோ! பெரியவசை கொள்வீரோ?

கண்பார்க்க வேண்டும் என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடித்தாள்"

என ஒரு பெண்ணுக்கு மட்டுமன்று, பெண்ணினத்திற்காகவும் பாடியிருக்கிறார்.

காலங்காலமாகப் பெண் இனத்திற்கு நிகழ்ந்த வன்கொடுமைகளை நினைத்து, பாரதியின் இதயமும் எழுதுகோலும் கலங்கியமைக்கு ஒரு சான்று போதும். இங்கிலாந்திலிருந்து வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருவதை காங்கிரஸ் மகாசபை விரும்பவில்லை. அவரை யாரும் வரவேற்கக்கூடாது என்று தீர்மானமும் போட்டது.

ஆனால், பாரதியார் ஒருவர் மட்டும் துணிந்து வரவேற்றார். காரணம் என்ன தெரியுமா? அவர்கள் ஆட்சிக்கு வந்து சட்டம் இயற்றியதால்தான், பெண்களை உடன்கட்டை ஏற்றலும், பால்ய விவாகமும் தடை செய்யப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியிலும் சில நன்மைகள் ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்கிறார், அந்த மகாகவி.

***"மற்றும் உன் நாட்டினோர் வந்ததன் பின்னர்,***
***அகத்தினில் சிலபுண் ஆறுதல் எய்தின!***
***கொடுமதப் பாவிகள் குறும்பெல்லாம் அகன்றன***
***ஆற்றினில் பெண்களை எறிவதூஉம், இரதத்து***
***உருளையில் பாலரை உயிருடன் மாய்த்தலும்***
***பெண்டிரைக் கணவர்தம் பிணத்துடன் எரித்தலும்***
***எனப் பல தீமைகள் இறந்து பட்டனவால்***

என பாரதியார் பாடியது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்பட்ட கொடுமைகளை ஒழிப்பதற்குத்தான்!

என்னதான் அன்று பாரதி பாடியிருந்தாலும், இன்றுவரை பாலியல் கொடுமைகள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. காரணம், காமுகர்களை இன்றைய சட்டத்தால் தண்டிக்க முடியவில்லை. காரணம், சாட்சிகளை இல்லாமல் செய்து விடுவதால். என்றாலும், வெட்டப்படும் பெண்களின் சாபம், வம்சத்தையே இல்லாமல் செய்துவிடும்.

**தி. இராசகோபாலன்**
**பேராசிரியர்**
*(நன்றி - தினமணி)*

## இன்றைய நாளில்...

- ★ 1675 – கோட்பிரீட் லைப்னிட்ஸ், y=f(x) என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன்முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பயன்படுத்தினார்.
- ★ 1889 – வொஷிங்டன் அமெரிக்காவின் 42ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- ★ 1919 – இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- ★ 1930 – ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர்சாதனப்பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- ★ 1933 – யாழ். பொது நூல் நிலையம் திறக்கப்பட்டது.
- ★ 1966 – நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.
- ★ 2004 – யாசிர் அரஃபாத் இனந்தெரியாத காரணங்களால் உயிரிழந்ததை பலஸ்தீன விடுதலை இயக்கம் உறுதி செய்தது. மஹ்முத் அப்பாஸ் அந்த இயக்கத்தின் தலைவரானார்.

## நக்கல் நமசிவாயம்

**தனுஷ்க திரும்பியும் வந்து விளையாடுவார் எண்டு சொல்லுறார் எஸ்.பி.திசாநாயக்க..! எந்த விளையாட்டை சொல்லுறார் உவர்..?**



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 10.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 118 5080 | 13 7026 |
| கனேடியன் டொலர் | 153 4288 | 165 5053 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 37 66 | 40 6302 |
| யூரோ | 248 12 1 | 263 2587 |
| ஜப்பான் யென் | 1 34 1 | 1 4434 |
| சிங்கப்பூர் டொலர் | 144 5537 | 155 34 6 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 7 8271 | 314 1317 |
| சுவிஸ் பிரான்ங் | 252 0443 | 27 6061 |
| ஐ.அ.டொலர் | 25 8571 | 260 6488 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 0473 |
| ஓமான் | ஓமான் றியால் | 833 0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,2153 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5516 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |

# மேல்மாகாண விருதை வென்றது கந்தானை கூட்டுறவுச் சங்கம்





(அஷ்ரப் ஏ சமத்)

2021ஆம் ஆண்டில் மேல்மாகாணத்தில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக கந்தானை கூட்டுறவுச் சங்கம் தெரிவுசெய்யப்பட்டு தங்க விருதை வென்றது.


இந்தச் சங்கம் இதுவே முதற்தடவையாக இவ் விருதினை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது தற்போதைய தலைவரின் கீழ் இச்சங்கம் 20220ஆம் ஆண்டில் 25.8 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளது.

இங்கு 214 ஊழியர்கள் சேவையாற்றுகின்றனர். அத்துடன், 87 ஆயிரம் உறுப்பினர்கள் இச் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கந்தானை கூட்டுறவுச் சங்கம் இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு பல்வேறு வியாபார சேவையையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதற்கான கேடயத்தை கந்தானை கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.கே.கவிசா மேல்மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்களின் ஆணையாளர் திருமதி ருவினி ஆயாச்சன விக்கிரமவிடம் கையளித்தார். பொது முகாமையாளர் திருமதி நீலா கேமானாந்த மற்றும் சபை உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சமூகம் ஒன்றின் இருப்புக்கு அதன் வரலாறே மிகவும் இன்றியமையாதது

## மௌலவி முஹம்மத் முஸ்தகீம் தெரிவிப்பு





(பேருவளை பீ.எம்.முக்தார்)

வரலாறு தெரியாத சமூகம் ஒரு நாட்டில் வாழ தகுதியற்ற சமூகமாக கருதப்படுகிறது. எனவே, எமது வரலாற்று ஆணிவேரைத் தேடிப் பார்க்க வேண்டும். இதற்காக எமது முன்னோர்கள், சமய வழிகாட்டிகள், சன்மார்க்கப் பெரியார்கள் போன்ற முன்னோடிகளது வாழ்க்கை வரலாறுகளை நாம் தெரிந்திருக்க வேண்டும். அவற்றை அடிக்கடி நினைவுகூர வேண்டும். அதற்காக இத்தகைய மஜ்லிஸ்கள் மிகவும் இன்றியமையாததொன்றாகும் - என்று ஐதுரீஸியத்துல் காதிரியா தரீக்காவின் இலங்கைக்கான கலீபா மௌலவி முஹம்மத் முஸ்தகீம் (நஜாஹி) கூறினார்.

பள்ளிவாசல் இமாம்களான மௌலவிகள் முஹம்மது பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி), முஹம்மது இக்ராம் (நுழாரி) ஆகியோர் தலைமையில் பேருவளை சீனன்கோட்டை, குட்டிமலை ஜலாலியா தர்ஹா பள்ளிவாசலில் கடந்த (05-11-22) சனிக்கிழமை மாலை இடம்பெற்ற குத்பு நாயகம் முஹையத்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) அவர்களின் நினைவாக வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் கந்தூரி மஜ்லிஸின் இந்த வருடத்திற்கான தமாம் வைபவத்தில் விசேட சன்மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது,

சமயப் பெரியார்கள், அவுலியாக்களது வாழ்க்கை வரலாறுகள், வாழ்க்கை தத்துவங்களை நாம் அடிக்கடி படிக்க வேண்டும். பிறருக்கு போதிக்க வேண்டும். அதன்மூலமே எங்களின் ஈமான் பலம் பெறுகிறது. அவர்களது முன்மாதிரிகள் எங்களிடம் குடிகொள்கின்றன.

பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்த தின மௌலூத் வைபவங்களில் அன்னாரின் முன்மாதிரியான வழிகாட்டல்கள் நினைவுறுத்தப் படுகின்றன. அதேபோன்று ஷாதுலி நாயகம் உள்ளிட்ட செய்குமார்களின் நினைவு நிகழ்வுகளிலும் அவர்களது வாழ்க்கை வரலாறுகளும் நினைவூட்டப்படுகின்றன. அந்த வகையில் இம்மாதம் கௌதுல் அஃலம் முஹையத்தீன் ஜீலானி(ரஹ்)அவர்களின் நினைவு மஜ்லிஸ்கள் பல இடங்களிலும் இடம்பெறுகின்றன.

குத்புமார்களின் நாயகமாகத் திகழும் அண்ணவர்கள் மிகவும் சிறந்த மகானாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்களது பெற்றோர்கள் கூட அல்லாஹ் ரசூலுக்கு அஞ்சி மிகவும் பேணுதலாக வாழ்ந்த வரலாறு எங்கள் முன் இருக்கிறது. எனவே, அவற்றைப் படிப்பதும் கேட்கவும் கூடிய வாய்ப்பு இத்தகைய மஜ்லிஸ்கள் மூலமே சாத்தியமாகிறது. அதனால் பள்ளிவாசல்கள்தோறும் ஏன் ஒவ்வொரு வீடுகளிலும் இவ்வாறான மஜ்லிஸ்கள் இடம்பெற வேண்டும். இதன்மூலமே ஆத்மீகத்தின்பால் குறிப்பாக சூபித்துவத்தின்பால் நாம் ஈர்க்கப்படுவதற்கு வழியேற்படுகிறது. மனிதன் மனிதப் புனிதனாக வாழ ஆத்மீகப் பாதையே சிறந்த வழி என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும் - என்றார்









திருமதி ஏ.யூ.எல்.எஸ்.அரபா எழுதிய 'கிட்டி போய்' சிறுவர் கதை எனும் நூல், 'மனிதம் கண்டேன்' எனும் இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை தேசிய நூலகத்தின் பட்டய நூலகர் எம்.எஸ்.எம்.சிஹாம் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் சிஹனா ரஹீம், கவிஞர் ரஷீட் எம். ரியாழ் உட்பட்ட அப்பாலே இதில் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# நீர்க்கட்டணம் அதிகமென கூறி தாக்கியவர் கைது

அதிக தண்ணீர்க்கட்டணம் வசூலிக்கப்படுவதாக குறிப்பிட்டு நீர்மானி வாசிப்பவரை தாக்கியவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயகல பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

தாக்குதல் நடத்திய நபர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேக நபர் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# இலங்கை நாடாளுமன்றத்தினால் கட்டான பிரதேச சபை உறுப்பினர்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சி















இலங்கை நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றுமொரு விசேட பொதுச் சேவைகள் நிகழ்ச்சி கட்டான பிரதேச சபையில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச சபையின் உறுப்பினர் அசங்க கமல்சிறி த சில்வா இலங்கை நாடாளுமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளுக் கிணங்க, நாடாளுமன்றம் மற்றும் அதன் கோட்பாடு, பாரம்பரியம் பற்றி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைத் தெளிவுபடுத்தும் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்க, சட்டவாக்க சேவைகள் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனகாந்த சில்வா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். அத்துடன், கட்டான பிரதேச சபையின் தலைவர் ஆர்.ஏ.சமிந்த ரத்னாயக்க உள்ளிட்ட சகல பிரதேச சபை உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்த தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டம் இலங்கையில் தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு, நிலையியற் கட்டளை, நாடாளுமன்ற முறைமை, பாரம்பரியம் மற்றும் சட்டம் போன்று நாடாளுமன்றத்தின் பாரம்பரியம் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், பிரதேச சபையின் உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர். அரசியலின் பரிணாம வளர்ச்சி, மாற்றப்பட வேண்டிய இடங்கள் குறித்து அவர்கள் வளவாளர்களிடம் கேள்விகளைத் தொடுத்திருந்தனர்.

எதிர்வரும் வரவு- செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலத்தில் நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு வருகை தருவது என்ற எதிர்பார்ப்புடன் இந்த விசேட நிகழ்வு முடிவுக்கு வந்தது. இதற்கான கோரிக்கையை பிரதேச சபை விடுத்திருந்தது.

# வி.பி.கணேசன் ஞாபகார்த்த நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

வி.பி.கணேசன் ஞாபகார்த்த மன்றத்தால் நடத்தப்படும் வருடாந்த நிகழ்வுகள் இம் மாதம் 13-11-2022 ஞாயிற்றுக்கிழமை புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு (தரம் 5), கொழும்பு 13, கிறீன் லேன், பதுர்தீன் முஸ்லிம் பாடசாலையில் நடைபெறும்.

தேசிய பாடசாலைகளுக்கான விஞ்ஞான அறிவுப் போட்டி, சமூக சேவையாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கு வி.பி.கணேசன் ஞாபகார்த்தமாக பொற்மணி செம்மல் விருது வழங்கி 17.12.2022 அன்று கௌரவிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதற்கான ஒழுங்குகளை மன்ற பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி, தலைவர் நிலாம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.





உடப்பு வம்பிவட்டான் கிராமத்தில் அமைந்திருக்கும் ஐயப்ப சுவாமி ஆலயத்தின் அஷ்டபந்தன புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வியாழக்கிழமை காலை தொடக்கம் (10) ஐயப்ப சுவாமிக்கு பக்த அடியார்களினால் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. (உடப்புசெய்தியாளர்)

திகதி 09.11.2022
புதன்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4934
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,308,040.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 4 8 9 0 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 40,636,900.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3176
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,609,700.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 39 64 71 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,014,514.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1389
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,922,120.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 0 6 9 9 4 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,536,890.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 964
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,721,740.00
வெற்றி இலக்கினம் C
வெற்றி இலக்கங்கள் 06 38 76 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 132,256,212.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 243
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,902,320.00
இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 43 48 59 60
விசேட இலக்கினம் கடகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,701,770.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1282
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,531,080.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 279,816,798.00
V 16 08 10 22 27
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# யாழ்ப்பாண விமான நிலையத்தை இயக்க அரசாங்கம் விரும்பவில்லை

## ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை இயக்க அரசாங்கத்திற்கு விருப்பம் இல்லை என்பதே உண்மை - என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதனை இயக்குவதற்கு இந்த அரசாங்கம் விரும்பவில்லை என்பதே உண்மை.

விமான நிலையத்தை இயக்கினால் தென்னிந்தியாவிலிருந்து நேரடியாக வடக்குக்கு பலர் பயணம் செய்வார்கள் என்பதுடன், கட்டுநாயக்காவிலிருந்து வீதி வழியாக சுமார் 08 மணிநேரத்திற்கு அதிக நேரம் செலவளித்து வடக்குக்கு வர வேண்டி இருப்பதால், புலம்பெயர் தேசத்தவர்களும், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக தமது பயணத்தை ஒழுங்கமைத்து கொள்வார்கள் என்பதால் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய வருமானம் அதிகரித்துவிடும் என்பதனாலேயே இதனை இயக்க விரும்பவில்லை.

விமான நிலையத்தை புனரமைக்குமாறு இந்தியா வழங்கிய 300 கோடி ரூபா எங்கே போனது எனத் தெரியவில்லை. கடந்த மூன்று வருடங்களில் எந்த புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றே அறிகிறோம்.

அது மாத்திரமன்றி விமான நிலையத்தில் இருந்த தொழில்நுட்ப உபகரணங்கள், தளபாடங்கள் உள்ளிட்டவை தெற்கு விமான நிலையங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன என அறிகிறோம்.

வரிச் சலுகை , சேவை கட்டண சலுகை என பல சலுகைகளை வழங்கியும் மத்தள விமான நிலையத்திற்கு எந்த விமானமும் வாராதபோதிலும்,




யாழ்ப்பாண விமான நிலையத்தில் வசதிகள் எதனையும் செய்யாது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் ஒத்த வரிகள் சேவை கட்டணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இவ்வாறான அதிகரித்த வரிகள், கட்டணங்கள் வசதிகளற்ற தன்மை உள்ளிட்ட காரணங்களால்தான் சேவைகளை நடத்த விமான சேவை நிறுவனங்கள் முன்வரவில்லை.

சலுகைகளை அறிவித்து, ஓடுபாதைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி, விமான நிலைய வசதிகளை அதிகரித்தாலே சேவைகளை விமான சேவை நிறுவனங்கள் முன்னெடுக்க முன்வரும். அதனை விடுத்து விமான சேவைகளை நடத்த யாரும் முன்வரவில்லை என கூறிக்கொண்டு இருக்கக்கூடாது – என்றார்.

# யாழ். போதனாவில் தீவிர இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு திறந்துவைப்பு







(யாழ். கஜி)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் 83ஆம் அணியின் ஆதரவில் தீவிர இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு நேற்று முன்தினம் (09) யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்துவைக் கப்பட்டது. கட்டடத்தை பரியோவான் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கதிர்காமர்தம்பி மாஸ்டர் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, பரியோவான் கல்லூரி முன்னாள் அதிபர் வணக்கத்துக்குரிய என்.ஜே.ஞானபொன்ராஜ் உட்பட மருத்துவர்கள், தாதியர்கள், பழைய மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

மேலும், யாழ். பரியோவான் கல்லூரி மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஈகிள் கெயர் ரிறஸ்ட் அமைப்பானது, இலங்கையிலுள்ள மக்கள் மற்றும் வைத்தியசாலைகளின் தேவைகளை அறிந்து உதவி வருகின்றது.

யாழ். பரியோவான் கல்லூரி 1983ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர இருதய சத்திர சிகிச்சைப் பிரிவானது, புதுப்பிக்கப்பட்டமையால் பகுதியளவில் தமது உதவியை இவ்வமைப்பு ஊடாக வழங்கியுள்ளனர். அத்துடன், இவ்வலகைப் பராமரிப்பதற்கும் தமது ஒப்புதலை வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழா







(யாழ். நிருபர்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 32ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும், கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம் மற்றும் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பிரதான மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெற்றது.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் கு.திருக்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை உறுப்பினர் ப.தர்ஷானந்த் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, நிறுவனத்தின் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

# 'நெடுந்தீவு லக்ஸ்மன்' காலமானார்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த ஊடகவியலாளர் நாகேந்திரர் லட்சுமண ராஜா நேற்று வியாழக்கிழமை காலமானார்.

ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளரான "நெடுந்தீவு லக்ஸ்மன்" என அழைக்கப்படும் நாகேந்திரர் லட்சுமண ராஜா நெடுந்தீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தொல்பொருள் திணைக்களத்தின் ஓய்வுநிலை உத்தியோகத்தருமாவார்.



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் தேசிய பத்திரிகைகள் என்பவற்றிலும் சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார்.

# பாண் - முட்டையின் கட்டுப்பாட்டு விலை காட்சிப்படுத்தப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

வியாபார நிலையங்களில் பாண், முட்டை ஆகியவற்றின் விலைகளைக் காட்சிப்படுத்தாத வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்டக் காரியாலய பிரதம அதிகாரி உதய நாமல்கம தெரிவித்தார்.

பலாங்கொடை நகர வியாபார நிலையங்களில் நேற்று இக்காரியாலய அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும்போது அவர் இத்தகவலை தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் பல வியாபார நிலையங்களைப் பரீட்சித்தபோது சட்டத்தைமீறி வியாபாரத்தில் ஈடுபட்ட குறிப்பாக வியாபார நிலையங்களில் பாணின் விலையை அதிகரித்தும் எடையைக் குறைத்தும் மற்றும் முட்டையின் விலையை அதிகரித்தும் விற்பனை செய்த பல வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரச ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு பயிற்சிப்பட்டறை




(தலவாக்கலை நிருபர்)

மத்திய மாகாணத்தின் அரச சேவையிலுள்ள ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான பயிற்சிப் பட்டறையொன்று கண்டி பல்லேகல முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே தலைமையில் இச்செயலமர்வு நடைபெற்றது. மத்திய மாகாணத்தின் அபிவிருத்திச் செய்திகளை பிரபலப்படுத்துவதற்கு உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் கொண்டுசெல்லும் நோக்குடனும் இச்செயலமர்வு இடம்பெற்றது.

இதன்போது மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) சந்தன விக்கிரமசூரிய, முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் திலினி தெஹிகொல்ல மற்றும் அமைச்சுகளையும் திணைக்களங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடக இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வறிய குடும்பங்களின் சுயதொழிலுக்காக ஒரு ஏக்கர் காணி பகிர்ந்தளிக்க நடவடிக்கை

## கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுப்பு

(க.கிஷாந்தன்)

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட வறிய குடும்பங்களின் சுயதொழில் வாய்ப்புக்காக ஒரு ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் மாதாந்த அமர்வில் தலைமை வகித்துப் பேசும்போது தெரிவித்தார். தலைவர் உட்பட 13 உறுப்பினர்கள் கலந்துகொண்ட அமர்வில் அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

கொட்டகலை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்களின் சுயதொழில் முயற்சிகளுக்காக காணியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அதற்கமைய, கொமர்ஷியல் பகுதியில் ஓர் ஏக்கர் காணியைப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பத்திரிகைகளில் கேள்விப் பத்திரம் கோரப்படவுள்ளது. காணியைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள், அதற்கான பணத்தை பிரதேச சபையில் வைப்பிலிட்டு, தாங்களாகவே கடைகளை நிர்மாணித்துக் கொள்ளலாம் அல்லது சபையின் ஊடாக கடைகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும். இதில்



எந்தவிதமான அரசியல் தொழிற்சங்க பேதமும் இருக்காது. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்து காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், எமது பிரதேச சபையின் ஊடாக ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் இலவச முன்னோடிப் பரீட்சை இம்மாதம் 19ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. கொட்டகலை பிரதேசத்தில் உள்ள 28 தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்கள் பயன்பெறவுள்ளார்கள். அதேபோல், சிங்கள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றும் 3 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நடத்தப்படும். இதற்கான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளவர்கள் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு, எமது சபைக்கு வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன் தெரிவித்துள்ளார். அவருக்கு சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.





**பதுளை – ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (09) நடைபெற்றபோது பூஜைகள் இடம்பெறுவதையும் பிரதான கும்பம் எடுத்து வரப்படுவதையும் சிவாச்சாரியார்கள் வேதம் ஓதுவதையும் படங்களில் காணலாம்.**

(படங்கள் - பதுளை நிருபர்)

# நுவரெலியாவில் இரத்ததான முகாம்




(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நுவரெலியாவில் நேற்று (10) இரத்ததான முகாம் இடம்பெற்றது.

நுவரெலியா கெலேகால கிராமத்தில் வாழும் விசேட தேவையுடையவர்களின் பெற்றோர்களின் சிவசக்தி நலன்புரி சங்கத்தினர் இணைந்து முழுமையான பங்களிப்புடன் குறித்த இரத்ததான முகாம் நுவரெலியா புதிய நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த இரத்ததான முகாமில் நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த மகா சங்கத்தினர்,

நுவரெலியா கெலேகால கிராமத்திலுள்ள விசேட தேவையுடைய பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் சங்க உறுப்பினர்கள் இளைஞர்கள், அரச-அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் என கலந்துகொண்டு தங்களது இரத்தத்தை தானம் செய்தனர்.

குறித்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங் களிலும் இவ்வாறான இரத்ததானம் மற்றும் ஏனைய சமூக நல நடவடிக்கைகளில் இந்த அமைப்பினர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பள்ளிவாசல்களது செயற்பாடுகளின் ஊடாக கல்வி, ஆன்மிக வளர்ச்சிகளை ஏற்படுத்தலாம்

## வக்பு சபையின் தவிசாளர் சட்டத்தரணி சப்ரி தெரிவிப்பு







**இக்பால் அலி**

பள்ளிவாசல்களில் நடைமுறைப்படுத்தும் திறன் மிக்க நிர்வாகங்களின் செயற்பாடுகளின் ஊடாக தம் பிரதேச சிறார்களின் கல்வி ஒழுக்க ஆன்மிக வளர்ச்சியை சிறந்த முறையில் ஏற்படுத்த முடியும் - என்று பிரதம அதிதியான வக்பு சபையின் தவிசாளர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன் தெரிவித்தார்

கம்பளை அல்-மத்ரஸத்துல் ஹக்கீமியாவின் 20 வருட மத்ரஸா மாணவர்களின் வருடாந்த மீலாத் தின கலை, கலாசார நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் விசேட கம்பளை சபயா ஹில் கல்யாண மண்டபத்தில் அதிபர் மௌலவி ஹுஸைன்டீன் பலாஹி தலைமையிலும் எக்லட் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் இஹதிசாம் எம்.ஹுஸைன்டீன் வழிகாட்டலுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வக்பு சபையின் தவிசாளர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன், கௌரவ அதிதிகளான உடபலாத்த பிரதேச செயலாளர் திருமதி ஆர்.ஏ.டி.தி.என்.தென்னகோன், கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்சிரி பெர்னாண்டோ ஆகியோருடன் விசேட பேச்சாளராக முன்னாள் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி, சிறப்பு விருந்தினராக கம்பளை முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எஸ்.யூ.எம். நஸார் உடையார் மற்றும் மிஸ்பாஹியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அஸ்ஹர் ரஹ்மானி, உலமாக்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வக்பு சபையின் தவிசாளர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

பள்ளிகளின் நிர்வாகசபைக்கு தெரிவு செய்யப்படுபவர்களை நியமனம் செய்வது வக்பு சபையாகும். குறித்த பள்ளியின் அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்படுவார்கள். அப்பள்ளியிலிருந்து தெரிவுசெய்யப்படும்போது சரியான நபர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். பள்ளிவாசல்களுக்கு அதிகளவு பங்களிப்புச் செய்யக்கூடியவர்கள், செலவு செய்பவர்கள், மார்க்க விடயங்களில் அறிவுமிக்கவர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

கல்வியோடு சம்மந்தப்பட்டவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நிர்வாக சபை என்பது பத்து வருடம் நாற்பது வருடம் என தொடர்ந்து பிடித்துக்கொண்டிருப்பதல்ல நிர்வாக சபை. அவர்களுடைய காலத்தில் சரியான முறையில் பரிபாலனம் செய்தல் வேண்டும். விசேடமாக இளம் வாலிபர்களையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு சரியான தலைமைத்துவ வழிகாட்டுதல்களையும் வழங்கி சரியான பாதையைக் காட்ட வேண்டும்.

நாம் எல்லோரும் முஸ்லிம்கள். எங்களுடைய சமூகம் முன்னோக்கிச் செல்வதற்கு ஒற்றுமை அவசியம். நாங்கள் சிறு சிறு விடயங்களுக்காகப் பிரிந்துகொண்டு இருப்பதை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கு நாங்கள் ஒன்றுபடுதல் வேண்டும். சகல மக்களும் கலந்துகொள்ளும் வகையில் பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

இந்நிகழ்வில் பிரதான மேடைகளில் அமர்ந்திருக்கும் பிரமுகர்களில் முஸ்லிம் அல்லாத இரு பிரமுகர்கள் கலந்துகொள்வதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். முஸ்லிம் சமூகத்தின் சமய கலாசார பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்வதற்கு இந்த தேசிய மீலாத் விழா உவப்பானதாக அமைந்துள்ளது. இது நாட்டில் சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்தக் கூடியவையாகும்.

இந்நிகழ்வில் சிறார்களுடைய நிகழ்வுகள் யாவும் மும்மொழிகளிலும் அரங்கேற்றப்பட்டன. அவர்களுடைய பேச்சுகள், உரையாடல்கள், கவிதை வாசித்தல், கலை, கலாசார பண்பாட்டு அம்சங்கள் யாவும் எல்லோரையும் கவரக்கூடியதாக அமைந்திருந்தன. இப்பிள்ளைகளின் கலை கலாசார ஆக்கத்திறனை வெளிக்கொணர்வதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் மிகுந்த ஆர்ப்பணிப்புடன் செயலாற்றியிருப்பார்கள் எனக் கருதுகின்றேன். அவர்களின் முயற்சிகளுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று அவர் தெரிவித்தார்.

மத்ரஸாக் கல்வியில் மொழி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனாலும் அவை அதிகளவு தமிழ் மற்றும் அரபு மொழிகளிலே போதிக்கப்படுகின்றன. ஆனால், இந்த இடத்தில் விசேடமாக சிங்கள மற்றும் ஆங்கில ஆகிய இரு மொழிகளிலும் தம் திறமையை வெளிப்படுத்தினர். எதிர்காலத் தலைமுறையினர்களுக்கு ஆங்கில மொழிக் கல்வியும் சிங்கள மொழிக் கல்வியும் அவசியமாகும். அத்தோடு தங்களுடைய கலாசார விழுமியங்களையும் பேணி நடத்தல் வேண்டும்.

இஸ்லாம் மிக அழகிய கலாசார விழுமியங்களைக்கொண்ட மார்க்கம். இலங்கை பல்லின சமூகத்தைக்கொண்ட நாடு. ஏனைய சமூகங்களும் எமது சமய, கலாசார விழுமியங்களைப் புரிந்து கொள்ளவும் தெளிவாக அறிந்துகொள்ளவும் ஆங்கிலம், சிங்களம் மொழிக் கல்வி மிகப் பயனுள்ளதாக அமையும். தேசிய நல்லிணக்கம், ஒருமைப்பாடு சகவாழ்வு என்ற விடயத்தில் அது சமூகங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த கூடியவை.

பிள்ளை வளர்ப்பில் முதல் அத்திவாரமாகஅமைவது இல்லமாகும். அங்கு இருந்துதான் ஆரம்பிக்கின்றது. அதில் விசேடமாக தந்தையை விட தாய்மார்களுக்குத்தான் அதிக கடமையும் பொறுப்பும் அமைந்திருக்கின்றன. ஒரு குடும்பத்தின் வேர் தந்தை அல்ல தாய். தாயார் 24 மணித்தியாலயமும் வீட்டில் இருக்கிறார். பிள்ளைகளுடைய தேவை எவை என்பது தெரியும். பிள்ளைகளைகளின் மாற்றத்தை தாய் அறிந்தகொள்வார்.

தந்தை வேலைக்குப் போய் வந்தால் பிள்ளைகள் பற்றிய விடயங்கள் தெரியாது. தந்தையின் உழைப்பின் காரணமாக பிள்ளைகளின் மீது கவனம் நேர காலம் இருக்காது. தாயார்தான் பிள்ளைகளை அவதானித்துக்கொண்டிருக்கிறார். தம் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்ற சிறிய சிறிய மாற்றங்களை அறிந்துகொள்வார். அவர்களுடைய நடவடிக்கைகளின் மூலமாகவோ அல்லது அவர்களுடைய பேச்சின் மூலமாகவோ அறிந்துகொள்வார். எனவே, தாயாருக்கு மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறது. எமது பிள்ளைகளை சிறிய வயதுமுதல் எத்தகைய வழிகாட்டல்களைச் செய்ய வேண்டும் என்பதைத் தேடிப்பார்த்து பிள்ளைகளை சிறந்த முறையில் வழிநடத்த வேண்டிய பொறுப்பு நமது தாய்மார்கள் எல்லோருக்கும் இருக்கிறது.

சிறிய வயது முதல் நாம் பழக்குகின்ற பழக்க வழக்கங்கள்தான் காலம் முழுவதும் நீடித்து நிலைத்து நிற்கும். எனவே, தன்னம்பிக்கையே எல்லோருக்கும் இருத்தல் வேண்டும். எந்த இலக்கையும் அடையலாம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு வழக்கில் ரவிகரன், சிவநேசன் உள்ளிட்டோர் விடுதலை

*- விஜயரத்தினம் சரவணன் -*



முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறாகச் செயற்பட்டதாகத் தெரிவித்து பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

அதேவேளை, குறித்த வழக்கானது எதிர்வரும் 02.03.2023 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காக திகதியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 12.06.2022 அன்று முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, கபோக் கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூசை வழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்தாலோக நற்பணி மன்றம், தென்னிலங்கையைச்சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயகரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்க முற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொதுமக்களோடும் மக்கள் பிரதிநிதிகளாக இணைந்து ஜனநாயகவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல்தென்ன ஆரண்ய விகாராதிபதி கல்கமுவ சந்தரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் தேரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்தனர்.

பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக் கமைவாக கடந்த 02.09.2022 அன்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களையும் வழங்கியிருந்தனர்.

இவ்வாறு வாக்குமூலங்களைப் பெற்றதைத் தொடர்ந்து, பொலிஸார் இந்த விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்தனர்.

அந்தவகையில் பௌத்த துறவிகளுக்கும், அவர்களுடன் வழிபாடுகளுக்காக வந்த குழுவினருக்கும் அச்சுறுத்தல் விடுத்தமை, அவமானம் ஏற்படுத்தும் வகையில் நடந்தமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து B/688/22 என்னும் வழக்கு இலக்கத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள், 10.11.2022 நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளதும், பொலிஸாரினதும் வாதங்களைச் செவிமடுத்த நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜூட் நிக்சன் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், குறித்த வழக்கினை எதிர்வரும் 02.03.2023ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காகத் திகதியிட்டுள்ளார்.

மேலும், இந்த விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தொடர்புபட்டிருப்பதாக பொலிஸார் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக வங்கித் தலைவருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உலக வங்கித் தலைவர் டேவிட் மல்பாஸ்ஸிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று எகிப்தின் ஷாம் அல்-ஷேக் நகரில் நடைபெற்றது. காலநிலை மாற்றம் தொடர்பான கோப்-27 மாநாட்டுடன் இணைந்ததாக இந்தச் சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் சவாலுக்குள்ளாகியுள்ள பேரண்டப் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமை தொடர்பில் உலக வங்கித் தலைவர் டேவிட் மல்பாஸ் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துரையாடினர். இச்சந்திப்பின்போது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டியதன் உடனடி தேவை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய கடன் நெருக்கடிக்கு, உரிய தீர்வை உரிய நேரத்தில் காணவேண்டியது அவசியமென வலியுறுத்திய உலக வங்கிக் தலைவர் மல்பாஸ், கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை உரிய தரப்புகளுடன் தொடருமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஊக்குவித்தார்.

இலங்கை அரச துறையிலுள்ள அதிகரித்த ஊழியர் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு பொதுச் செலவினங்களை வினைத்திறனுடன் கையாள்வதற்கான வழிகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அவசியமான மறுசீரமைப்புகளை முன்னெடுப்பது குறித்தும் உலக வங்கித் தலைவர் மல்பாஸ் மற்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துரையாடினர்.

இலங்கை மக்களின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நிலையான தனியார்துறையின் வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கும் அவசியமான சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் (IDA) சலுகை அடிப்படையிலான நிதியுதவி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றை கொள்கை ஆலோசனைக்கமைய உலக வங்கிக் குழுமம் (WBG) வழங்கும் என்றும் அதன் தலைவர் இதன்போது உறுதியளித்தார்.

விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான உரப் பயன்பாடு மற்றும் பெறுமதியை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்தும், சேவைத்துறையில் பெரும் ஆதிக்கம் செலுத்திவரும் சுற்றுலா மற்றும் கல்வி ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களைத் தணிப்பதற்கும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நிதி தேவை என்பன தொடர்பிலும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.






**இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் பிரதி உதவிச் செயலாளர் அப்ரின் அக்தர், கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்தார்.**




**அனைத்துலக தமிழர் மேம்பாட்டு நிதியத்தின் பூரண அனுசரணையுடன் அதிரடிக் குழுமம் முன்னெடுக்கும் "போதைக்கெதிரான பாதை" எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்றுமுன்தினம் (09) தெல்லிப்பழை மஹாஜனா கல்லூரியில் நடைபெற்றது.**

**இதன்போது மாணவர்களுக்கிடையிலான சித்திரம் வரைதல் மற்றும் சுலோகம் எழுதுதல் போன்ற போட்டிகள் இடம்பெற்றன. சுலோகம் எழுதுதலில் தரம் 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்கள் அனைவரும் பங்கெடுத்ததுடன், சித்திரம் வரைதலில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு தமது எண்ணக்கருக்களை சித்திரமாக வரைந்திருந்தனர்.**

# வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் 45 நாட்களாகியும் கரை சேரவில்லை

## மீட்டுத்தருமாறு கண்ணீருடன் கோரிக்கை விடுக்கும் குடும்பத்தினர்!

(மீராவோடை நிருபர் – எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி ஆழ்கடலுக்குச் சென்ற நான்கு மீனவர்கள் தொடர்பான எவ்விதத் தகவல்களும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிவரை கிடைக்கவில்லை என்று வாழைச்சேனை ஆழ்கடல் மீனவர் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக காணாமல்போயுள்ள மீனவர்களின் குடும்பத்தினரை சந்திக்கச் சென்றபோது அவர்கள் தங்களது மனக் குமுறல்களை எம்மிடம் கண்ணீருடன் பகிர்ந்து கொண்டனர்.

"எங்கள் வாப்பாவுக்கு 63 வய. அவர் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக கடற்றொழிலில் ஈடுபட்டு வருகிறார். அவரது தொழில் பயணத்தில் கடலில் காணாமல்போனது இதுதான் முதல் தடவையாகவுள்ளது.

அவருக்கு வயது சென்றாலும் தொழில் செய்து சாப்பிட வேண்டும் என்றுதான் இதுவரைக்கும் தொழிலை விடாமல் செய்துவந்தார். இவ்வாறு தொழிலுக்கு சென்ற எனது தந்தை, சகோதரன் உட்பட நான்கு மீனவர்களும் இதுவரை வீடு வரவில்லை.

அவர்கள் எங்கேயாவது இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தால் மாத்திரமே எங்களுக்கு போதும். எங்களிடம் இருக்கின்ற ஒரே ஒரு வீட்டை விற்பனை செய்தாவது நாங்கள் அவர்களை மீட்டெடுப்போம்.


இர்ஷாத்


றிஸ்வி


முகாஜித்


அசன் அலி

காணாமல்போனவர்களை தேடும் பணிகள் மந்தகதியில் காணப்படுகின்றன. அவர்களை தேடிச்சென்றால் கூட எங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும். ஆனால், இதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அசமந்தப்போக்குடன் உள்ளார்கள். எங்களால் முடிந்த முயற்சிகளை நாங்கள் எடுத்துள்ளோம் - என்று காணாமல்போன 63 வயதுடைய உமர்தீன் அசன் அலி என்பவரின் மகன் முஜாஹித் எம்மிடம் கூறினார்.

''எனது தந்தை நிச்யம் வருவார் என்ற நம்பிக்கையோடுதான் நான் இருந்துவருகிறேன். எனக்கு எதுவும் வேண்டாம். எனது தந்தை எனக்கு வேண்டும். அவர் மீண்டும் எங்களிடம் வர வேண்டும் என்று நான் தொழுதுகொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து வருகிறேன். எனது தந்தையின் நினைவால் அவரின் ரீசேர்ட்டை அணைத்தவாறே நான் தூக்கத்துக்குச் செல்கின்றேன்" - என்று காணாமல்போன 34 வயதுடைய முகாஜித் என்பவரின் 12 வயது மகள் சுஜானா கண்ணீருடன் கூறினார்.

"கடலுக்குச் சென்ற எனது கணவர் சுமார் 47 நாட்கள் கடந்தும் வீடு வரவில்லை. அதனால் நான் மிக மனவேதனையுடன் வாழ்ந்து வருகிறேன். எங்களுக்கு 11 வயதில் ஆண்பிள்ளை ஒன்றும், 5 வயதில் பெண்பிள்ளை ஒன்றும் உள்ளனர். அவர்கள் பாதிப்படைந்துவிடக்கூடாது என்பதற்காக எனது கவலைகளை அடக்கி வருகிறேன். வாப்பா எப்ப வருவார் என்று பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் கேட்கின்றனர். வரும்போது சொக்லட் வாங்கி வருவாறா? என்று அந்த பிஞ்சு உள்ளங்கள் கேட்கின்றன.

காணாமல்போயுள்ள எனது கணவர் உட்பட நான்கு மீனவர்களும் வீடு வரவேண்டும். தரைவழியில் அவர்கள் காணாமல்போயிருந்தால் நாங்கள் அவர்களை கண்டுபிடிக்க தேடிச் சென்றிருப்போம். அவர்கள் கடலில் காணாமல் போயுள்ளதால் நாங்கள் கரையில் தவிக்கிறோம்.

இதுவரைக்கும் அவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. பிறரின் உதவியால் நாங்கள் எத்தனை நாட்களுக்கு சாப்பிடப் போகிறோம். எங்களுக்கு எதுவுமே வேண்டாம். காணாமல் போனவர்கள் வீடு வந்தால் மாத்திரமே போதும். தேடும் நடவடிக்கையில் முயற்சி காணாமல் இருக்கிறது. தேர்தல் காலங்களில் மாத்திரம் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்டு எம்.பிக்களாக ஆகுகின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் வந்தால் அவர்கள் எங்களை எட்டிக்கூட பார்ப்பதில்லை. எங்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அவர்கள் எங்களை பார்க்கத்தானே வேண்டும். அவர்கள்தான் அரசாங்கத்துடன் பேசி மீனவர்களை கண்டுபிடித்துத் தரவேண்டும்" என்று காணாமல்போன 34 வயதுடைய எம்.எச்.எம்.றிஸ்வி என்பவரின் மனைவி ஏ.ஜீ.நிசாயா கூறினார்.

"எங்களுக்கு எதுவும் வேண்டாம். உங்களிடம் நாங்கள் அல்லாஹுக்காக கெஞ்சிக் கேட்கிறோம். காணாமல்போன எனது மகன் உட்பட நான்கு ஏழை மீனவர்களையும் கண்டுபிடித்துத் தாருங்கள்" என்று காணாமல்போன 32 வயதுடைய பீ.எம்.இர்ஷாத் என்பவரின் தாயார் அழுது புலம்பினார்.

ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் பயணம் செய்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும் 47 நாட்களாகியும் இதுவரை வீடு திரும்பவில்லை. மீனவர்கள் 200 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யதற்காக வேண்டியே அவர்களுக்கான உணவுகள் மற்றும் எரிபொருட்களை கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலுக்குச் சென்று காணாமல் போயுள்ள மீனவர்களை கண்டுபிடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுக்க வேண்டும் என்பதுடன், நான்கு மீனவர்களும் எந்தவித ஆபத்துகளுமின்றி வீடு வந்து சேர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

# இலக்கிய விமர்சனப் போட்டியில் வெண்கலப் பதக்கம்; சம்மாந்துறை முஸ்லிம் வித்தியாலய மாணவி சாதனை



(சம்மாந்துறை நிருபர்)

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்டு 12 கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவி ஏ.எவ்.ஸகீய்யா பானு தேசிய மட்ட போட்டியில் ஐந்தாம் பிரிவில் உள்ள இலக்கிய விமர்சனப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார்.

இவர் உதுமாலெப்பை அஸ்றப் - அலியார் ஜுமானா தம்பதியின் மூத்த புதல்வியாவார். இம்மாணவி தேசியமட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதையிட்டு பாடசாலை அதிபர் திருமதி யு.என்.ஏ.ரஹீம் தலைமையில் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் (08) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.


அத்துடன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் பயிற்சி மற்றும் நெறிப்படுத்தல்களை "சந்தக்கவி எம்.ஐ.அச்சி முஹம்மட் ஆசிரியர், பாடசாலையின் தமிழ்த்துறை இணைப்பாளரும், தமிழ் மொழித் தின பொறுப்பாசிரியருமாகிய குரு பிரதீபா பிரபா, ஆசிரியர் ஏ.பி.முஹம்மத் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை மேலும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் விஜயம்

(பொத்துவில் நிருபர்)



ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (09) சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்திற்கு விஜயம் செய்தனர்.

சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் இருபத்தோராயிரம் அங்கத்தவர்களுக்கு ஐந்து கிளைகள் ஊடாக கடனுதவு சேவையை வழங்கி வருகிறது. "வட்டியில்லா பொருளாதாரம் அருள் நிறைந்த எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் அச்சங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தால் முன்னெடுக்கப்படும் வட்டியில்லா கடனுதவி சேவையை ஏறாவூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியினூடாக முன்னெடுப்பது தொடர்பான சாத்தியங்களை கண்டறிவதே இக் களக்கற்றல் விஜயத்தின் நோக்கமாகும்.

இவ்விஜயத்தில் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எல்.ஏ.லெத்தீப், ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல்.ஏ.காதர், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.ஜிப்ரி, கணக்காய்வாளர் எஸ்.ஜாபீர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.அஜ்வத், ஏ.சி.எம்.அஷ்ரப் ஆகியோருடன் அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஐ.எம்.இப்றாஹிம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டுறவின் வளர்ச்சியை கற்றுக்கொண்ட பாடங்களாக கொள்ள கிழக்கு மாகாணத்தில் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கமும் முன்மாதிரியான சங்கங்களாக திகழ்வது சிறப்பம்சமாகும்.

# பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் இன்று ஆரம்பம்

இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் இன்று முதல் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வென்னப்புவவிலுள்ள ஆல்பர்ட் பீரிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த போட்டிகளுக்கு, இலங்கையில் அடிமட்ட விளையாட்டுகளை அபிவிருத்தி செய்யும் பயணத்தில் நெஸ்லே மைலோ 29வது ஆண்டாக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. 13,15,17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் (ஏ மற்றும் பி) என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் இந்த சம்பியன்ஷிப் போட்டியில் நாடு முழுவதிலும் இருந்து கிட்டத்தட்ட 4000 வீரர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

Nestlé MILO

# உலகக்கிண்ண ரசிகர் கிராமம் திறப்பு





கட்டார் விமான நிலையங்களுக்கு அருகிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட அமைக்கப்பட்ட உலகக்கிண்ண ரசிகர் கிராமம் திறந்துவைக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் அறைகளுக்குச் சென்றபோது 3.1 சதுர கிலோமீற்றர் (1.1 சதுர மைல்) தளத்தில் பாலைவனக் காற்று மணலை உதைத்தது. அதில் ஒரு மெட்ரோ நிலையம், பேருந்து நிறுத்தம், திட்டமிடப்பட்ட தற்காலிக உணவகம் மற்றும் வசதியான கடை ஆகியவை இருந்தன. இப்பகுதியில் முன்பதிவு செய்தால் கோட்பாட்டளவில் 12,000 பேர் வரை தங்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரகாசமான வண்ண அறைகள், ஒவ்வொன்றும் மெல்லிய சுவர்கள், இரட்டை படுக்கைகள், ஒரு நைட்ஸ்டாண்ட், ஒரு சிறிய மேசை, நாற்காலி, குளிர்சாதனம், ஒரு கழிப்பறை மற்றும் உள்ளே குளியலறையுடன் ஒன்று அல்லது இரண்டு பேர் தங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. டோஹா சர்வதேச விமான நிலையம், ஹமாத் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள இந்தத் தளத்தை விட ஒரு இரவுக்கு 80 டொலர் கட்டணத்தில் மற்ற அறைகள் வழங்கப்படும்.

இது உலகக்கிண்ணப் போட்டியின்போது அனைத்து அணிகள், தொழிலாளர்கள், தன்னார்வலர்கள், ரசிகர்களுக்கான ஹோட்டல் பற்றாக்குறையால் கேம்பிங் மற்றும் கேபின் தளங்களை உருவாக்கியுள்ளது. பயணக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியது. மேலும் அண்டை நாடுகளில் தங்குவதற்கு ரசிகர்களை ஊக்குவிக்கிறது.

போட்டிக்காக ஒரு நாளைக்கு 1,30,000 அறைகள் இருக்கும் என்று கட்டார் மதிப்பிட்டுள்ளது.

ரசிகர்களுக்கு ஹோட்டல்கள், பயணக் கப்பல் அறைகள், பாரம்பரிய டோ பாய்மரக் கப்பல்கள், கூடாரங்கள், ஃபேன் கிராமம், போர்டா கேபின்கள் மற்றும் கேரவன்கள் வரை வாடகைக்கு கிடைக்கும். இவை தவிர, இன்னும் பல வசதிகள் உள்ளதாக என அல்-ஜாபர் கூறினார்.

# மலிக் – சானியா ஜோடி விவாகரத்து



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அனுபவ துடுப்பாட்ட வீரர் சொஹைப் மலிக் - பிரபல இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஜோடி விவாகரத்து செய்துள்ளனர்.

கடந்த 2010இல் 5 மாதங்கள் காதலித்து இருவரும் திருமணம் செய்துகொண்டனர். சானியா மிர்சா கடந்த சில நாட்களாக இந்தியாவில் வசித்து வருகிறார். அவர்களுக்கு இஷான் என்ற மகன் உள்ளார். மலிக் தனக்கு துரோகம் செய்து ஏமாற்றியதை சானியா கண்டு பிடித்ததைத் தொடர்ந்து இது நடந்துள்ளது. அப்போதுதான் இருவரும் பிரிந்து வாழ முடிவு செய்தனர்.

இருப்பினும் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவர்கள் தங்கள் மகன் இஷானுக்கு பெற்றோராக இருப்பார்கள். சமீபத்தில் இருவரும் தங்கள் மகனின் பிறந்தநாளை ஒன்றாக கொண்டாடினர். மலிக் இன்ஸ்டாகிராமில் கொண்டாட்டத்தின் புகைப்படங்களை பகிர்ந்துகொண்டாலும் சானியா வெளியிடவில்லை.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# இந்தியாவை வீழ்த்தி மூன்றாவது தடவையாக இறுதிப் போட்டிக்குள் இங்கிலாந்து




## இறுதியாட்டத்தில் பாகிஸ்தானுடன் பலப்பரீட்சை

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டிக்கு இரண்டாவது அணியாக இந்தியாவை 10 விக்கெட்டுகளினால் வெற்றிகொண்ட இங்கிலாந்து அணி தெரிவானது. மேலும் 5 வருடங்களின் பின் மீண்டும் இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. அதாவது, கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஆறாவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் ஆடியதன் பின்னர் இங்கிலாந்து அணி தற்போது மூன்றாவது தடவையாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவான நிலையில், நேற்று அடிலெய்டில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய - இங்கிலாந்து அணிகள் மோதின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச்சை தெரிவுசெய்தது.

அதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 169 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 16 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

அதன்படி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியுடன், இங்கிலாந்து அணி பலப்பரீட்சை நடத்துகிறது.

## போடியார் புலம்பல்!



**தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தல நடத்தும் அதிகாரம் இருந்தும் அதை தள்ளிப்போட எத்தனிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுறாங்க எலுவா?**


**வாற வருஷம் மார்ச் மாதத்தோட இப்ப இருக்கிற சபைகள் செயலற்று போகுமாம்..!**

**அதற்கு இடையில மறுகா உள்ளூராட்சித் தேர்தல நடத்தோணும் ஆனா, தேர்தல் ஆணைக்குழு விளாங்கா திண்ட குரங்குபோல முழுசிறாங்க நரிட சம்மதம் இல்லாம!**

# மட்டு. மாவட்டத்தில் 48 மணிநேரத்தில் 96.9 மி.மீ. மழை: வீதிகள் வெள்ளத்தில்; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான அடைமழை பெய்து வருகின்றது. கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 48 மணிநேரத்தில் 96.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ரமேஸ் தெரிவித்தார்.

கடும் அடைமழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகளில் வீதிகள் உட்பட தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வாகரை, புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, நாவற்குடா, கொக்கொடிச்சோலை உட்பட பல இடங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது.

கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. வலையிறவு பாலம் நீரில் மூழ்கியது



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழை காரணமாக மட்டக்களப்பு நகரையும் மண்முனை மேற்கு பிரதேசத்தையும் இணைக்கும் வலையிறவு பாலத்தின் ஒரு பகுதி நீரில் மூழ்கியுள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து மேற்கே மண்முனை மேற்கு பிரதேசத்திற்கு செல்லும் பிரதான பாதை இதுவாகும். இவ்வீதி ஒரு பகுதி நீரில் மூழ்கியுள்ள நிலையில், மக்களின் பயணங்கள் பெரும் சிரமத்துடன் மேற்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. நேற்று முன்தினம் (09) பிற்பகல் இவ்வீதியால் சுமார் இரண்டு அடி நீர் ஊடறுத்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால் முச்சக்கரவண்டி செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மோட்டார்சைக்கிளில் பயணிப்போர் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

# யானை தாக்கி பெண்ணொருர் பலி



**ஆலையடிவேம்பு கண்ணகி கிராமத்தில் சம்பவம்**

(திருக்கோவில் மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு கண்ணகி கிராமத்தில் நேற்று (10) அதிகாலைவேளை யானை தாக்கியதில் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

30 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதிகாலைவேளையில் காட்டுயானையினால் வீடு உடைக்கப்படும்போது தனது பிள்ளையைக் காப்பாற்ற முயற்சித்தவேளை குறித்த பெண் காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

மேலும் காட்டு யானையினால் நேற்று அதிகாலை கண்ணகி கிராமம் பகுதியில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# தென்கிழக்குப் பல்கலையில் இஸ்லாமிய கற்கை பீடத்தில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பணம்





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் துறையின் பட்டப்பிற்படிப்பு நிகழ்ச்சித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு பீடத்தின் கேட்போர் கூடத்தில் இப்பீடத்தின் பீடாதிபதியும் இக்கற்கை நெறிகளுக்கான பாடத்திட்டக் குழுவின் தலைவருமான பேராசிரியர் எஸ்.எம்.எம்.மஸாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து சிறப்பித்த அதேவேளை, இந்நிகழ்வின் பிரதம உரையாளராக ஓய்வுபெற்ற பேராசிரியரும் இப்பீடத்தின் முதல் பீடாதிபதியுமான எம்.எஸ்.எம்.ஜலால்தீன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுமுதல் இளங்கலைமாணிக் கற்கைநெறிகளுக்கான மாணவர்களை உள்வாங்கி வந்த இப்பீடம் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களூடான தனது வரலாற்றில் இஸ்லாமிய கற்கைகள் துறையில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களான முது தத்துவமாணி மற்றும் கலாநிதிக் கற்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளமை இப்பீடத்தின் துரித வளர்ச்சி மற்றும் துறைசார் ஆய்வு தொடர்பான அதன் செயலூக்கத்தை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

இலங்கை முஸ்லிம் சிறுபான்மை சூழமைவின் எதிர்மறையான பொதுப்பண்புகளுள் ஒன்றான ஆன்மீக, அரசியல், பொருளாதார, கல்வி, சமூகம்சார் அம்சங்கள் பொதுவாக அறிவை மையப்படுத்தியதாகவோ ஆய்வு முடிவுகளை முதன்மைப்படுத்தியதாகவோ இல்லாமல் இருப்பதனை சுட்டிக்காட்டிய இப்பீடத்தின் பீடாதிபதியும் இக்கற்கைநெறிகளுக்கான பாடத்திட்டக் குழுவின் தலைவருமான பேராசிரியர் எஸ்.எம்.எம்.மஸாஹிர் ஆய்வு பல்கலைக்கழகங்களின் பிரதான பணிகளுள் ஒன்று என்றவகையில் அதிலும் குறிப்பாக, விஞ்ஞானபூர்வமான, மிக நுணுக்கமான, ஆழமான ஆய்வுகளை பட்டப்பின்படிப்பு மாணவர்கள் ஊடாகவே நிறைவேற்ற முடியும் என்பதைக் குறிப்பிட்டமையானது இப்பீடத்தின் வரலாற்றுப்பாதையில் இந்நிகழ்வின் முக்கியத்துவத்தையும் துறைசார் சமூக விஞ்ஞான ஆய்வு தொடர்பான இப்பீடத்தின் கரிசனைய்யும் பறைசாற்றுகின்றன.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், தொழில்நுட்பப்பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத், இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி ஆர்.ஏ.சர்ஜுன், அரபு மொழித்துறைத் தலைவர் திருமதி எம்.ஸி.எஸ்.ஸாதிபா, நூலகர் எம்.எம்.ரிபாய்தீன், பீடத்தின் ஏனைய முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பீடத்தின் உதவிப் பதிவாளர் பிரஷாந்த், இளங்கலை மாணவர்கள், புதிதாக பட்டப்பிற்படிப்பு கற்கைகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணர்கள், ஏனைய பீடங்களின் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று பிரதேச சபை வளாகத்தில் காய்கறி அறுவடை



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான "பாதுகாப்பான, முழுமைப்படுத்தப்பட்ட உணவு" என்ற திட்டத்தின் அடிப்படையில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன் வளாகத்தில் கத்தரி, மிளகாய் போன்ற மரக்கறி வகைகளை முன்னோட்டமாக (ஒத்திகையாக) பயிரிடப்பட்டது. அப்பயிர்களிலிருந்து நேற்று முன்தினம் காய்கறி அறுவடை நிகழ்வு நடைபெற்றது.

''திட்டத்தின் ஒத்திகையில் கிடைத்த பரிபூரணமான திருப்திகளோடு அக்கரைப்பற்று பிரதேச சபை உலக வங்கியின் உதவியுடன் (LDSP) திட்டத்தினூடாக ஒவ்வொரு வட்டாரங்களிலும் தெரிவுசெய்யப்படும் குடும்பங்களின் வாழ்வாதாரங்களை ஊக்குவிக்க காய்கறி நடும் திட்டத்தினையும் ஓர் அங்கமாக செயல்படுத்த ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது'' - என அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாஸீக் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# பைந்தமிழ்ச் சுடர் நீலையூர் சுதாவின் 'கிடுகு வீடு' நூல் அறிமுக விழா




(பைஷல் இஸ்மாயில்)

பைந்தமிழ்ச் சுடர் நீலையூர் சுதாவின் 'கிடுகு வீடு' நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் (09) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பிஸ்.ரத்னாயக்க முதன்மை விருந்தினராகவும், திருகோணமலை மாவட்ட செயலாளர் பீ.எச்.என்.ஜயவிக்ரம, சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆர்.யூ.ஜலீல் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது, கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பிஸ்.ரத்னாயக்காவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டு. வாகனேரி பிரதேசத்தில் மோட்டார் குண்டுகள் மீட்பு



(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாகனேரி பிரதேசத்தில் மோட்டார் குண்டுகள் அடங்கிய வெடிப் பொருட்கள் சிலவற்றை நேற்று முன்தினம் (9) மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலினையடுத்து குறித்த பிரதேசத்திற்கு சென்று அவற்றினை மீட்டுள்ளனர்.

இதன்போது ரி-81 ரக மோட்டார் குண்டுகள் 20 மீட்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். 2 இரும்புப் பெட்டிகளில் அடைத்துவைக்கப்பட்டு நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட குண்டுகளை செயலிழக்கச் செய்யும்பொருட்டு வாழைச்சேனை பொலிஸார் ஊடாக வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியை நாடியுள்ளனர். குறித்த பிரதேசமானது கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் பிரதேச கலை இலக்கிய விழா



(திராய்க்கேணி நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் நடத்தப்படும் 2022இற்கான பிரதேச கலை இலக்கிய விழா அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முசாபிர் சட்டத்தரணி தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதேச மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், கலைஞர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டி.எம்.ரின்சான், கவிஞர் பாலமுனை பாரூக், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எஸ்.ராஜாயா, வீ.பத்மராசா மற்றும் பாடசாலை அதிபர்கள்,



மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் 7 வீதிகளுக்கு பெயர்ப்பலகைகள்

(வெல்லாவெளி நிருபர்)




களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு கிராமத்தில் அமரத்துவமடைந்த இராசநாயகம் மேரிநாயகி குடும்பத்தினர் மற்றும் ஜோர்ஜ் அன்ரன் ஆகியோர்களின் முழுமையான நிதி அனுசரணையுடன் பெரியகல்லாறு கிராமத்திலுள்ள வீதிகளுக்கு வர்த்தமானி மூலம் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டு பெயர்ப்பலகைகள் இடப்படும் நிகழ்வும் திறந்துவைக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (9) ஒலிம்பியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் இரா.கோபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது ஜோர்ஜ் வீதியிலிருந்து ஆரம்பமாகி பெரியகல்லாறின் தெற்கு எல்லையிலுள்ள மதுரம் வீதி வரையான 7வீதிகளுக்கு இவ்வாறு பெயர்ப்பலகை நடப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஸ், மண்முனை தென்எருவில்பற்று, களுதாவளை பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன், பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.கணேசநாதன், எம்.மேகராஜ், பிரதேச சபை செயலாளர் மற்றும் அதிகாரிகள், கிராமத்திலுள்ள ஆலய வண்ணக்கர், விளையாட்டுக் கழகங்கள், கோயில் தலைவர்கள், மதத் தலைவர்கள், கிராமத்திலுள்ள முக்கிய நபர்கள் போன்றவர்களால் வைபவ ரீதியாக முதல் நிகழ்வாக ஜோர்ஜ் வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 6 வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

## இசைஞானிக்கு கலாநிதி பட்டம்



இசைஞானி இளையராஜா 'கலாநிதி பட்டம்' வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்த விழாவில் இசையமைப்பாளர் இளையராஜா மற்றும் மிருதங்க வித்துவான் உமையாள்புரம் சிவராமன் ஆகியோருக்கு 'கலாநிதி' பட்டம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

## இசையமைப்பாளர் யுவனுக்கு கோல்டன் விசா



இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவுக்கு ஐக்கிய அரபு அமீரக அரசு கோல்டன் விசா வழங்கியுள்ளது.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை கௌரவிக்கும் விதமாக ஐக்கிய அரபு அமீரகம் கோல்டன் விசாக்களை வழங்கி வருகிறது. அதை வைத்திருப்பவர்கள் 10 ஆண்டுகளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் குடிமகன்களாகக் கருதப்படுவார்கள்.

ஏற்கனவே இந்த கோல்டன் விசாவை நடிகர்கள் கமல்ஹாசன், பார்த்திபன், விஜய்சேதுபதி, சிம்பு, நாசர், மோகன்லால், மம்முட்டி, பிருதிவிராஜ், சஞ்சய் தத், ஷாருக்கான், துல்கர் சல்மான், நடிகைகள் திரிஷா, காஜல் அகர்வால், மீனா, மீரா ஜாஸ்மின், அமலாபால், லட்சுமிராய், பிரணிதா, மீனா, ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் பெற்றுள்ளனர். இந்நிலையில், தற்போது யுவன் சங்கர் ராஜாவுக்கும் வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அரபு மொழியில் பாரதியார் கவிதை



அரபு மொழியில் வெளியான பாரதியார் கவிதைகளை ஐக்கிய அரசு இராச்சியத்தின் டுபாய் இலக்கியவாதிகள் பாராட்டியுள்ளனர். சென்னை பல்கலையின் அரபுத்துறை பேராசிரியர் ஜாகீர் ஹுசைன், பாரதியார் கவிதைகளை அரபியில் மொழிபெயர்த்துள்ளார்.

இதை படித்த டுபாய் சமூக மேம்பாட்டு அமைச்சு அரச செயலர் ஹெஸ்ஸ் தெஹ்லக், தொழில்நுட்ப ஆலோசகர் சயீத் அப்துல்லாஹ், எழுத்தாளர்கள் அஸ்மா அல்-ஸர்ஹூனி, ஆசிப் மீரான் உள்ளிட்டோர் பாரதியாரின் கவிதைகளையும், ஜாகீர் ஹுசைனின் மொழிபெயர்ப்புத் திறனையும் பாராட்டியுள்ளனர்.

இந்த நூலை, இந்திய - டுபாய் நாடுகளின் நல்லுறவை வளர்க்கும் வகையில், டுபாய் அரச அதிகாரிகளுக்கு, சமூக மேம்பாட்டு அமைச்சு அதிகாரிகள் சிபாரிசு செய்துள்ளனர்.

## மாலைதீவில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தங்கியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ

8 இந்தியர்கள்

2 பங்களாதேஷியர் உட்பட

10 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்



மாலைதீவு தலைநகர் மாலேயில் வெளிநாட்டினர் தங்கியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 8 இந்தியர்கள் மற்றும் பங்களாதேஷைச் சேர்ந்த இருவர் என 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் தீக் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.



மாலைதீவில் இலங்கை, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோர் வேலைக்காக சென்று அங்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடுகள் வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். இந்நிலையில், தலைநகர் மாலேயுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தங்கியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு திடீரேன தீ விபத்து ஏற்பட்டுள்ளது.



இந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் தரை தளத்தில் மின்சாதனங்கள் விற்பனைசெய்யும் கடையானது செயற்பட்டு வந்துள்ளது. இந்தக் கடையில் ஏற்பட்ட தீயானது அடுக்குமாடிக் குடியிருப்பு முழுவதும் பரவியது. எச்சரிக்கை ஒலி கேட்டு அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்கயிருந்தோர் வெளியே ஓடிவந்த நிலையில், சிலர் தீயில் சிக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தகவல் அறிந்துவந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தொடர்ந்து பல மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், 8 இந்தியர்கள் மற்றும் பங்களாதேஷைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களது உடல் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பலர் தீக்காயங்களுடன் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இறந்தவர்கள் முகம் எரிந்த நிலையிலுள்ளதால் இறந்தவர்கள் யார் என்பதை அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்டல - மகர விளக்கு பூஜைகள் 17இல் ஆரம்பம்



### சபரிமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

சபரிமலையில் வருடாந்த மண்டல பூஜை - மகரவிளக்கு யாத்திரை காலம் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐயப்ப பக்தர்களின் பாதுகாப்புக்காக தீவிர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில பொலிஸ்துறை தலைவர் அனில் காந்த் தெரிவிக்கையில்,

கொரோனா கட்டுப்பாடுகள் நீக்கத்துக்குப் பின்னர் நடைபெறுவதால், நிகழாண்டு யாத்திரையில் பக்தர்கள் வருகை அதிகமிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஆறு கட்டங்களாக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பக்தர்களின் கூட்டம் மற்றும் போக்குவரத்தை நிர்வகிப்பதற்காக சுமார் 14,000 பொலிஸார் பணியமர்த்தப்படவுள்ளனர். 134 இடங்களில் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டு, ட்ரோன்கள் மூலம் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

3 தற்காலிக பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மோட்டார்சைக்கிள்கள் மூலம் ரோந்து பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

நிலக்கல்லில் வாகன நிறுத்துமிட வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கேரள சாலைப் போக்குவரத்துக் கழகத்துக்கு சொந்தமான பஸ்கள், 15 அல்லது அதற்கு மேற்பட்டோர் பயணிக்கும் வசதி கொண்ட வாகனங்கள் மட்டுமே நிலக்கல்லை தாண்டி பம்பை வரை சென்றுவர அனுமதிக்கப்படும். இதர தனியார் வாகனங்கள் அனுமதிக்கப்படாது - என்றார் அவர்.

## எந்த மாதிரியான போரையும் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும்

### சீன ஜனாதிபதியின் உத்தரவால் பதற்றம்

எந்த மாதிரியான போரையும் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும் என அந்நாட்டு இராணுவத்துக்கு ஜனாதிபதி ஸி சின்பிங் (Xi Jinping) உத்தரவிட்டுள்ளார்.

சீனாவில் மன்னர் ஆட்சிக்குப் பின் ஆட்சியை பிடித்த தேசியவாத கட்சி படைகளுக்கும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செம்படைக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இதில் செம்படை வெற்றிபெற்ற நிலையில், அதன் தலைவரான மா சே துங் ஆட்சியை கைப்பற்றினார். தோல்வியடைந்த கோமின்டாங் என அழைக்கப்பட்ட தேசியவாத கட்சியினர் தென் சீனக் கடலில் தாய்வானுக்கு குடிபெயர்ந்தனர்.

அங்கிருந்து ஆட்சியமைத்த கட்சியினர் தங்களை சுதந்திர நாடாகவும் அறிவித்தனர். இதனை ஏற்காத சீனா, தாய்வான் தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்றும் மற்ற நாடுகளும் தாய்வானை அங்கீகரிக்கக்கூடாது என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், தாய்வானை தனி இறையாண்மைகொண்ட நாடாக 13 நாடுகள் அங்கீகரித்துள்ளன. மேலும், தாய்வானுக்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. தாய்வானை ஆக்கிரமிக்க சீனா முயன்றால் அந்நாட்டிற்கு எதிராக போர் தொடுப்போம் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதுமட்டுமன்றி சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா சபாநாயகர் நான்சி பெலோசி கடந்த ஓகஸ்ட் மாதம் தாய்வானுக்கு வருகை தந்தார். அந்தநேரத்தில் தாய்வான் அருகே சீனக் கடற்படை போர்ப் பயிற்சியில் ஈடுபட்டதால் போர்ப் பதற்றம் ஏற்பட்டு பின்னர் தணிந்தது. இந்தச் சூழலில் இராணுவப் பயிற்சியை வலுப்படுத்தவும் எத்தகைய போருக்கும் இராணுவம் தயாராக இருக்கவும் ஜனாதிபதி ஸி ஜின்பிங் உத்தரவிட்டதாக சீனாவின் அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

தலைநகர் பீஜிங்கிலுள்ள கூட்டு இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள மத்திய இராணுவ ஆணையகத்தை நேரில் பார்வையிட்ட அவர் சீனர்கள் முன் உள்ள பல்வேறு சவால்களையும் முறியடிக்க இராணுவம் தயாராக இருக்கவேண்டும் என அறிவுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் புரிவதற்கும், வெற்றியை உறுதிசெய்வதற்கும் ஏற்ற வகையில் இராணுவம் தனது ஒட்டுமொத்த சக்தியையும் திரட்டி தயார் நிலையில் இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி இராணுவத்தினரிடையே உரையாற்றினார். இதன்மூலம் தாய்வான் பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க சீனா முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்த நிலையில் சீனா - தாய்வான் போர் மூண்டால் பொருளாதாரம் பெரும் சரிவை சந்திக்கும் அபாயமுள்ளதாக உலக நாடுகள் கவலையில் ஆழ்ந்துள்ளன.



## 15இல் அமெரிக்க இடைத்தேர்தல் முடிவுகள்

### 80 வயதை கடந்த ட்ரம்ப் மீண்டும் போட்டிக் களத்தில்




அமெரிக்க இடைத்தேர்தல் முடிவுகளை உலகம் உற்று நோக்கிக் கவனித்து வருகிற நிலையில் முடிவுகள் எதிர்வரும் 15ஆம் திகதி வெளியாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வல்லரசு நாடான அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் மொத்தமுள்ள 435 இடங்களுக்கும், செனட் சபையில் 35 இடங்களுக்கும் தேர்தல் நடைபெற்றுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இத்தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் பெரும்பாலான வேட்பாளர்கள் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் தலைமையில் போட்டியிட்டுள்ளனர்.

அதனால், தற்போதைய தேர்தலில் ட்ரம்பின் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றினால் 2024ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் 80 வயதைக் கடந்த ட்ரம்பே மீண்டும் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் மீது முட்டை வீச்சு

### மர்மநபர் மடக்கிப்பிடிப்பு





பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமிலா மீது முட்டை வீசிய இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு இங்கிலாந்திலுள்ள யார்க் நகரில் நடைபெற்ற பாரம்பரிய விழாவில் மன்னர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமிலா கலந்துகொண்டு பொதுமக்களை சந்தித்தனர். அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்களை நோக்கி மன்னரும், ராணியும் கையசைத்து உரையாடிக்கொண்டிருந்தனர்.



அப்போது, திடீரென கோஷங்கள் எழுப்பியபடி வந்த இளைஞரொருவர் "இந்த நாடு அடிமைகளால் உருவாக்கப்பட்டது. நீங்கள் மன்னர் அல்லர்" என்று கூறி மன்னர் சார்ள்ஸை நோக்கி முட்டைகளை வீசினார். மன்னர் சார்ள்ஸ் மீது படாத நிலையில், முட்டை வீசிய இளைஞரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து கூடியிருந்த மக்கள் "கடவுளே, மன்னரைக் காப்பாற்றுங்கள்" என்று முழக்கமிட்டனர். மன்னர் மீது முட்டை வீசப்பட்ட நிகழ்வு அங்கு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

கடந்த 70 ஆண்டுகளாக பிரித்தானிய மகாராணியாக இருந்தவர் ராணி இரண்டாம் எலிசபெத். உலகில் அதிக ஆண்டுகள் ராணியாக இருந்தவர் என்ற பெருமையை பெற்ற அவர், ஸ்கொட்லாந்திலுள்ள அரண்மனையில் செப்டெம்பர் மாதம் காலமானார்.

ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து, அவரது மகனான சார்ள்ஸ், பிரித்தானிய மன்னரானார். சார்ள்ஸ் மன்னரானதை பலரும் விரும்பவில்லை. குறிப்பாக, மன்னர் ஆட்சியை விமர்சிக்கும் போராட்டக்காரர்கள் பலரும் "சார்ள்ஸ் எங்கள் மன்னர் அல்லர்" என்று குரல் எழுப்பி தங்கள் எதிர்ப்பை பதிவுசெய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7